# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு
2014 – 2015

மானியக் கோரிக்கை எண்.18

**டி.பி.பூனாட்சி**
கதர் மற்றும் கிராமத் தொழில்கள் அமைச்சர்

தமிழ்நாடு அரசு
2014

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2014–2015

### பொருளடக்கம்

| வ. எண் | துறை | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டு வளர்ச்சித்துறை | 1 - 56 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் “பூம்புகார்” | 57 – 77 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம் | 78 – 108 |
| 4 | தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | 109 - 114 |

## பட்டு வளர்ச்சித் துறை

அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | வரலாற்றின் பார்வையில் | 1 |
| 2 | பட்டுத் தொழிலின் முக்கிய அம்சங்கள் | 2 |
| 3 | பட்டு | 3 – 5 |
| 4 | பட்டு வளர்ச்சித் துறை | 6 – 9 |
| 5 | உட்கட்டமைப்பு வசதிகள் | 9 – 29 |
| 6 | துறை செயல்பாட்டிற்கான வழி முறைகள் | 30 |
| 7 | தமிழ்நாட்டில் மல்பரி சாகுபடி | 31 |
| 8 | வெண்பட்டு / கலப்பின பட்டு உற்பத்தி | 31 – 32 |
| 9 | பயிர் காப்பீடு | 32 – 33 |
| 10 | மருத்துவ காப்பீடு | 33 |
| 11 | சாதனைகள் | 34 |
| 12 | நிதி ஒதுக்கீடு | 34 – 37 |
| 13 | கிரியா ஊக்கித்திட்டத்தின் கீழ் 2014–2015ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் | 37 – 53 |
| 14 | தமிழகத்தில் பட்டுத்தொழில் மேலும் விருத்தியடைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் | 54 – 55 |
| 15 | 2014–2015ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 56 |


## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார்"

அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 57 |
| 2 | விற்பனை | 58 – 60 |
| 3 | கண்காட்சிகள் | 61 – 63 |
| 4 | வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் தமிழ்நாடு கைவினைப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளித்தல் | 63 – 64 |
| 5 | ஏற்றுமதி | 64 |
| 6 | விற்பனை நிலையங்கள் | 65 |
| 7 | உற்பத்தி | 65 – 67 |
| 8 | நிதிநிலை செயல்பாடுகள் | 67 |
| 9 | மனித வள மேம்பாட்டினை வலுபடுத்துதல் | 68 |
| 10 | கைவினைஞர்களுக்கான நலதிட்டங்கள் | 68 – 69 |
| 11 | பயிற்சி திட்டங்களின் மூலம் புதிய தலைமுறை கைவினைஞர்களை உருவாக்குதல் | 69 – 73 |
| 12 | கைவினைஞர்களுக்கான விருதுகள் | 73 – 76 |
| 13 | நடைமுறையில் உள்ள பிற திட்டங்கள் | 77 |

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 78 – 81 |
| 1 | கதர் | 81 – 87 |
| 2 | கதர் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலத் திட்டங்கள் | 87 – 90 |
| 3 | கிராமத் தொழில்கள் | 90 – 101 |
| 4 | இயற்கை சிகிச்சை மையம் | 101 |
| 5 | சந்தை படுத்துதல் | 102 – 104 |
| 6 | பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 104 – 105 |
| 7 | உற்பத்தி மற்றும் விற்பனை | 106 |
| 8 | அரசிடம் இருந்து பெறப்படும் நிதியுதவி | 107 – 108 |
| 9 | மறுபணியமர்வு | 108 |
| 10 | தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | 109 – 114 |

## பட்டு வளர்ச்சித்துறை

### 1. வரலாற்றின் பார்வையில்

பட்டு உற்பத்திக்காக, கலை மற்றும் அறிவியல் நுணுக்கத்துடன் பட்டுப்புழுக்களை வளர்ப்பதே பட்டுத் தொழிலாகும். முதன்முதலில் பட்டு நெசவிற்கு பயன்படும் நூலிழையாக கி.மு. 2640ஆம் ஆண்டில் 'சை லிங்க் சி' என்ற சீனப் பேரரசியால் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் வளர்ப்பு முறைகளும் பட்டு நெசவும் 2,500 வருடங்களுக்கு மேல் சீனர்களால் இரகசியமாக பாதுகாக்கப்பட்டு வந்தது. சீனாவின் இலாபகரமான வர்த்தகப் பொருளாக 'பட்டு' இருந்தது. பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டு நெசவு ஆகியன விவசாயத்தை சார்ந்த கிராமியத் தொழிலாக இருப்பதாலும் சமுதாயத்தில் அதிக அளவில் உள்ள, சற்றே வறிய பிரிவினரால் கையாளப்படுவதாலும், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் பிரபலமாக தொடர்ந்து மேற்கொள்ளப்படும் தொழிலாக உள்ளது. பட்டுக்கூடுகளை உருவாக்கும் பட்டுப்புழுக்களுக்கு உணவளிப்பதற்காக உணவுத் தாவரத்தை சாகுபடி செய்தல் மற்றும் பட்டுக்கூடுகளில் உள்ள பட்டு இழைகளை, மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக நெசவிற்கான பட்டு நூலாக பிரித்து எடுத்தல் மற்றும் பட்டு நூற்பு ஆகியன பட்டுத்தொழிலின் முக்கிய செயல்பாடுகளாகும்.



### 2. பட்டுத் தொழிலின் முக்கிய அம்சங்கள்

பட்டுத் தொழில் அதிக அளவில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித்தரும் ஆற்றல் கொண்டதாகும். பட்டுத் தொழில் மூலம் ஒரு கிலோ கச்சாப்பட்டு நூல் உற்பத்திக்கு 11 மனித நாட்கள் வீதம் (பண்ணை மற்றும் பண்ணை சாரா செயல்பாடுகளில்) ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித்தரவல்லது என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கிராமப்பொருளாதார வளர்ச்சிக்கு வலுவூட்டுவதுடன் பட்டு ஜவுளிகளின் மொத்த மதிப்பில் 57 சதவீதம், பட்டுக்கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கே மீண்டும் சென்றடைய வழிவகுக்கிறது. பட்டுத் தொழிலானது விவசாயிகளுக்கு குறைந்த கால அவகாசத்தில் தொடர்ந்து வருவாய் தரக்கூடியதாகவும், மாதந்தோறும் அதிக வருவாயினை ஈட்டக்கூடிய தொழிலாகவும் விளங்குகிறது. 25 முதல் 27 நாட்களுக்கு ஒரு முறை பட்டுப்புழு வளர்ப்பு மூலம், பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து விவசாயிகள் அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் நேரடியாக விற்பனை செய்து, காலதாமதமும் இன்றி, விற்பனை செய்த நாளன்றே பட்டுக்கூடுகளுக்குரிய தொகையினை பெற முடிகிறது. பட்டுக்கூடுகள் விற்பனையில் இடைத்தரகர்கள் எவரும் இல்லை. பட்டுத் தொழில் மகளிருக்கு ஏற்ற தொழிலாகவும் விளங்குகிறது. பட்டுத் தொழிலின் பல்வேறு செயல்பாடுகளில் 60 சதவீத பணிகள் மகளிரால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3. பட்டு

**3.1** பட்டு ஓர் இயற்கை இழை ஆகும். இதன் நளினம் மற்றும் ஈர்க்கும் தன்மையால் இது 'ஆடைகளின் ராணி' என அழைக்கப்படுகிறது. மல்பரி, டசார், ஈரி மற்றும் முகா என நான்கு வகையான இயற்கைப் பட்டு வகைகள் உள்ளன. இந்த நான்கு வகை பட்டினை உற்பத்தி செய்யும் பட்டுப்புழுக்கள் வெவ்வேறு தாவரங்களை உணவாக உட்கொள்கின்றன. இந்த நான்கு வகை பட்டு இரகங்களையும் உற்பத்தி செய்யும் தனித்துவத்தை இந்தியா பெற்றுள்ளது. பட்டுக்கூடுகளிலிருந்து பட்டு நூல் நூற்பு செய்ய ஏதுவாக இருப்பதால் மல்பரி பட்டு இரகமே, முக்கிய வர்த்தக இரகமாக திகழ்கிறது. ஒரு மல்பரி பட்டுக்கூட்டிலிருந்து 700-1,500 மீட்டர் தொடர்ச்சியான இயற்கை இழை நூற்பு பெறலாம். மல்பரி இலைகளை உணவாக அளித்து குடில்களில் பட்டுப்புழுக்களை வளர்ப்பதன் மூலம் மல்பரி பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு முக்கியமாக மல்பரி பட்டினை உற்பத்தி செய்கிறது. மல்பரி பட்டில் இரண்டு வகைகள் உள்ளன. அவை வெண்பட்டு மற்றும் மஞ்சள் பட்டு ஆகும். இரு சுழற்சியின பட்டுக்கூடுகளிலிருந்து எடுக்கப்படும் வெண்பட்டு, சர்வதேச தரம் வாய்ந்ததாக உள்ளதால் அதனை விசைத்தறியில் பயன்படுத்த முடிகிறது.






பட்டு புழு, பட்டு கூடு மற்றும் பட்டு பூச்சி

**3.2** உலக அளவில் இந்தியா மல்பரி பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இருப்பதுடன், பட்டு ஜவுளிகளை அதிக அளவில் நுகரக்கூடிய நாடாகவும் விளங்குகிறது. ஆனாலும் தேவைக்கு ஏற்ப பட்டு உற்பத்தி இல்லாத நிலையில் குறிப்பிடத்தக்க அளவில் பட்டு இறக்குமதி செய்யப்படுவதன் மூலம் அந்நியச் செலாவணி ஏற்படுகிறது. தற்போதைய நிலையில், இந்தியாவின் கச்சாப்பட்டுத் தேவை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 30,000 மெட்ரிக் டன் ஆகும். இதில் 23,000 மெட்ரிக் டன் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு மீதம் பெரும்பாலும் சீனாவிடமிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தமிழகத்தின் கச்சாபட்டுத் தேவை அளவான சுமார் 3,000 மெட்ரிக் டன்னில் 1,200 மெட்ரிக் டன் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதம் பெரும்பாலும் அண்டை மாநிலமான கர்நாடகா மற்றும் சீன நாட்டிலிருந்து பெறப்படுகிறது.

**3.3** தமிழகத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்பினால், இந்தியா தரம்வாய்ந்த பட்டினையும், பட்டு ஜவுளிகளையும் உற்பத்தி செய்து, ஓர் ஆண்டிற்கு ரூபாய் 2,300 கோடி அளவில் அவற்றை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இவ்வாறு ஏற்றுமதி செய்வது ஆண்டிற்கு ஆண்டு மேலோங்கி வரும் நிலையில் இருப்பதால், பெருமளவு அந்நியச் செலாவணி ஈட்டப்படுகிறது.



## 4. பட்டு வளர்ச்சித்துறை

**4.1** 1956ஆம் ஆண்டில், மொழிவாரி மாநில மறுசீரமைப்பிற்கு முன்னர், தமிழ்நாட்டில் தாளவாடி மற்றும் ஓசூர் பகுதிகளில் மட்டுமே குறைந்த அளவில் பட்டுத் தொழில் மேற்கொள்ளப்பட்டது. மறுசீரமைப்பிற்குப் பின்னர், மேம்படுத்தப்பட்ட கலப்பின பட்டுப்புழுவளர்ப்பு மூலம் அதிக அளவில் பட்டுக்கூடு உற்பத்தி செய்யப்பட்டதால், பட்டுத்தொழில் தமிழகத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. ‘தீவிர பட்டுத் தொழில் மேம்பாட்டுத் திட்டம்’ செயல்படத் துவங்கியதன் விளைவாக வேலை வாய்ப்பு உருவாகி, விவசாயிகளுக்கு தொடர் வருவாய் பெற்றிட வழிவகுத்த நிலையில், தமிழ்நாடு அரசு, 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், சேலத்தை தலைமையிடமாகக் கொண்ட தனித்துறையாக, பட்டு வளர்ச்சித் துறையை தோற்றுவித்தது.

**4.2** பட்டு வளர்ச்சித் துறையானது, பட்டுத் தொழிலை மேம்படுத்தும் வகையில் பின்வரும் நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறது.

- அதிக மகசூல் தரும் மல்பரி இரகங்களை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தல்.
- மல்பரி சாகுபடி, பட்டு முட்டை உற்பத்தி, பட்டுப்புழு

வளர்ப்பு, பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றுதல், கணினி உதவியுடன் துணி நூல் வடிவமைத்தல் ஆகியவை குறித்த பயிற்சி அளித்தல்.

- நோயற்ற, தரமான பட்டு முட்டைகள் விநியோகம் செய்வதை உறுதிப்படுத்துதல்.
- பட்டுக்கூடுகள் உற்பத்தித் திறனை அதிகரிக்க, தொழில் நுட்ப பரிமாற்றம் செய்தல்.
- மல்பரி சாகுபடி, இளம்புழு வளர்ப்பு மையங்களை தோற்றுவித்தல், சொட்டு நீர்ப்பாசன முறையை அமைத்தல், புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் தனியாக புழுவளர்ப்பு குடில்கள் கட்டுதல் போன்றவைகளுக்கு மானியம் அளித்தல்.
- தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்கு பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகு அமைக்க உதவியளித்தல்.
- பட்டுக்கூடு மற்றும் பட்டு நூல் ஆகியவற்றிற்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் .
- பட்டு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- பட்டு விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- பட்டு கைத்தறி நெசவாளர்களின் வேலைப்பளுவினை குறைத்து, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் தறிகளை மேம்படுத்த உதவியளித்தல்.



**4.3** தமிழகத்தில் பட்டு வளர்ச்சித்துறையின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திட கீழ்க்காணும் பணியிடங்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 4 |
| 3 | துணை இயக்குநர் | 9 |
| 4 | உதவி இயக்குநர் | 27 |
| 5 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 6 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 7 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 856 |
| 8 | இதர பணியிடங்கள் | 338 |
| | **மொத்தம்** | **1,481** |

**4.4** பட்டு வளர்ச்சித்துறை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கீழ் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. பட்டு வளர்ச்சித்துறை இயக்ககம், பட்டுத் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயல் படுத்துதல், சார்நிலை அலுவலகங்களான மண்டல மற்றும் விரிவாக்க உதவி இயக்குநர் அலுவலகங்கள் மூலம் மேற்கொண்டு வருகிறது. ஈரோடு, தருமபுரி, மதுரை, வேலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் 5 மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. விரிவாக்க செயல்பாடுகளை மேற்கொள்ள உதவி

இயக்குநர் (பட்டு வளர்ச்சி) அலுவலகங்கள் 19 இடங்களில் அமைந்துள்ளன. மாநிலத்தின் பட்டு விதை ஒருங்கிணைப்பு பணிகளைக் கவனிக்க ஒசூரில் துணை இயக்குநர் (விதை) தலைமையில் ஒரு அலுவலகம் செயல்படுகிறது.

**4.5** சென்னை தவிர தமிழகத்தின் பிற 31 மாவட்டங்களிலும் பட்டு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ப்பு விரிவான அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நீலகிரி, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மிதமான அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற மாவட்டங்களில் பட்டு வளர்ப்பு சிறு அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 5. உட்கட்டமைப்பு வசதிகள்

மாநிலத்தில் பட்டுத் தொழிலின் மேம்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் கீழ்க்காணும் உட்கட்டமைப்பு வசதிகள் / அலகுகள் உள்ளன.



### 5.1 தொழில் நுட்ப சேவை மையங்கள்

பட்டு விவசாயிகளுக்கு மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு குறித்த அனைத்து தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குவதற்காக, மாநிலத்தில் 105 தொழில்நுட்ப சேவை மையங்கள், செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தொழில் நுட்ப சேவை மையமும் ஒரு பட்டு ஆய்வாளர் அல்லது பட்டு உதவி ஆய்வாளர் தலைமையில் செயல்படுகிறது. ஒவ்வொரு தொழில் நுட்ப சேவை மையமும் 3 அல்லது அதற்கு மேற்பட்ட உட்சரகங்களாகப் பிரிக்கப்பட்டு இளநிலை ஆய்வாளர்களுடன் செயல்படுகின்றன. மாவட்ட வாரியாக, செயல்படும் தொழில் நுட்ப சேவை மையங்களின் விபரம் பின்வருமாறு.

**தொழில் நுட்ப சேவை மையங்கள்**

| மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | வ. எண் | உதவி இயக்குநர்களின் தலைமையிடம் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஒசூர் | 7 |
| | | 2 | தேன்கனிக்கோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |
| | தருமபுரி | 4 | தருமபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| ஈரோடு | சேலம் | 6 | சேலம் | 7 |
| | கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப்பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | நீலகிரி | 11 | குன்னூர் | 1 |
| வேலூர் | வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு | 12 | வாணியம்பாடி | 8 |

| மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | வ. எண் | உதவி இயக்குநர்களின் தலைமையிடம் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்ட மலைப்பகுதிகள் | 13 | திருவண்ணாமலை | 6 |
| | விழுப்புரம், கடலூர் | 14 | விழுப்புரம் | 4 |
| திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, அரியலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், நாகப்பட்டிணம். | 15 | திருச்சி | 8 |
| | நாமக்கல், கரூர் | 16 | நாமக்கல் | 7 |
| மதுரை | திண்டுக்கல், சிவகங்கை. | 17 | திண்டுக்கல் | 6 |
| | தேனி, மதுரை, ராமநாதபுரம் | 18 | தேனி | 5 |
| | திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி. | 19 | தென்காசி | 7 |
| | | | **மொத்தம்** | **105** |

## 5.2 ஆதார பட்டு விதை உற்பத்தி

பட்டு விவசாயிகள் புழு வளர்ப்பு மேற்கொள்வதற்கு தேவையான பட்டு முட்டைகளை உற்பத்தி செய்வதற்கு, பி3, பி2 மற்றும் பி1 ஆகிய மூன்று நிலைகளில், பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளை பராமரித்து, விதைக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை, இதற்கெனவே தெரிவு செய்யப்பட்ட, தனியாக அமைந்துள்ள அரசு பட்டுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.



உள்நாட்டின மற்றும் இரு சுழற்சியின பட்டுப் புழுக்களின் இனப் பண்புகளைப் பராமரித்து, உற்பத்தி செய்வதற்கென, இத்துறையில் பின்வரும் 19 விதைப் பண்ணைகள் செயல்படுகின்றன.

**விதைப் பண்ணைகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண் | விதைப் பண்ணையின் பெயர் | நிலை | மொத்தப் பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | பேரிகை | பி3 | 3.67 |
| | | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 11.38 |
| | | 3 | ஒசூர் | பி2 | 44.72 |
| | கல்கொண்டப்பள்ளி | 4 | கல்கொண்டப்பள்ளி | பி3 | 5.65 |
| | | 5 | தளி | பி3 | 3.50 |
| | உத்தனப்பள்ளி | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 26.24 |
| | | 7 | உளிமங்கலம் | பி2 | 9.80 |
| | | 8 | மேலகிரி | பி1 | 10.20 |
| | கோலட்டி | 9 | கோலட்டி | பி1 | 868.55 |
| சேலம் | சேலம் | 10 | ஏற்காடு | பி2 | 5.96 |
| ஈரோடு | தாளவாடி | 11 | ஆசனூர் | பி2 | 9.00 |
| | மாதஹள்ளி | 12 | மாதஹள்ளி | பி1 | 785.29 |
| திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 13 | அத்தனாவூர் | பி1 | 5.73 |
| நாமக்கல் | நாமக்கல் | 14 | கொல்லிமலை | பி1 | 13.10 |
| தேனி | தேனி | 15 | மயிலாடும்பாறை | பி2 | 10.00 |
| திருநெல்வேலி | தென்காசி | 16 | செங்கோட்டை | பி1 | 42.24 |
| நீலகிரி | குன்னூர் | 17 | குன்னூர் | பி3 | 25.25 |
| | | 18 | மசினக்குடி | பி2 | 8.35 |
| | | 19 | மசக்கல் | பி2 | 18.95 |

## 5.3 வித்தகங்கள்

பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யும் அலகுகள் வித்தகங்கள் என அழைக்கப்படுகின்றன. மாநிலத்தின் தேவையான மொத்த பட்டு முட்டைகள், **11** அரசு வித்தகங்கள் மற்றும் **3** மத்திய அரசின் கீழ் செயல்படும் தேசிய பட்டுப்புழு விதை அமைப்பு வித்தகங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிருஷ்ணகிரி, ஒசூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசு வித்தகங்கள் மூலம் இரு சுழற்சியின பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**வித்தகங்கள்**

| **மாவட்டம்** | **உதவி இயக்குநர்** | **வ. எண்** | **வித்தகத்தின் பெயர்** | மாநிலஅரசு / மத்திய பட்டு வாரியம்* | **உற்பத்தித் திறன்** (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஒசூர் (வித்தகம்) | 1 | ஒசூர் | அரசு | 14.50 |
| | | * | ஒசூர் | மத்திய பட்டு வாரியம் | 14.00 |
| | கிருஷ்ணகிரி (வித்தகம்) | 2 | கிருஷ்ணகிரி | அரசு | 9.50 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சோகத்தூர் | அரசு | 3.00 |
| | | * | தருமபுரி | மத்திய பட்டு வாரியம் | 8.00 |
| | பென்னாகரம் | 4 | பென்னாகரம் | அரசு | 3.00 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | அரசு | 4.00 |
| ஈரோடு | ஈரோடு | 6 | ஈரோடு | அரசு | 8.00 |
| | தாளவாடி | 7 | தாளவாடி | அரசு | 4.00 |



| **மாவட்டம்** | **உதவி இயக்குநர்** | **வ. எண்** | **வித்தகத்தின் பெயர்** | மாநிலஅரசு / மத்திய பட்டு வாரியம்* | **உற்பத்தித் திறன்** (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| வேலூர் | வாணியம்பாடி | 8 | வாணியம்பாடி | அரசு | 3.00 |
| | | * | திருப்பத்தூர் | மத்திய பட்டு வாரியம் | 8.00 |
| திருச்சி | திருச்சி | 9 | திருச்சி | அரசு | 4.00 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 10 | திண்டுக்கல் | அரசு | 3.00 |
| திருநெல்வேலி | தென்காசி | 11 | குற்றாலம் | அரசு | 4.00 |

அதிக அளவில் பட்டு முட்டைகள் தேவைப்படும் காலங்களில் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்ய **6** தனியார் வித்தகங்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

## 5.4 அரசு பட்டுப்பண்ணைகள்

மாநிலத்தில், **6** வீரிய இன பட்டுப் பண்ணைகள், **6** செயல் விளக்க மற்றும் பயிற்சி மையங்கள், **5** மாதிரி மல்பரி பட்டுப் பண்ணைகள், **10** விவசாயிகள் பயிற்சி மையங்கள் மற்றும் **4** இளம் பட்டுப்புழு வளர்ப்பு பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. மல்பரி நாற்று உற்பத்தி, இளம்புழு விநியோகம் மற்றும் விவசாயிகள் பயிற்சி ஆகிய பணிகள் இப்பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஐந்து பி3 விதைப்பண்ணைகள், எட்டு பி2 விதைப்பண்ணைகள் மற்றும் ஆறு பி1 விதைப்பண்ணைகள் மூலம் விதைக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## அரசு பட்டுப் பண்ணைகள்

| மாவட்டம் (இடவாரியாக) | உதவி இயக்குநர் (நிர்வாக கட்டுப்பாட்டில்) | வ. எண் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர் | 1 | ஓசூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.18 |
| | கிருஷ்ணகிரி | 2 | ஊத்தங்கரை | கலப்பின பட்டுப்பண்ணை | 3.72 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சித்தேரி | கலப்பின பட்டுப் பண்ணை | 5.79 |
| | | 4 | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 5.84 |
| | பென்னாகரம் | 5 | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.81 |
| சேலம் | சேலம் | 6 | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் | 14.50 |
| | | 7 | மணியார் குண்டம் | கலப்பின பட்டுப்பண்ணை | 50.00 |
| | | 8 | புதூர் | கலப்பின பட்டுப்பண்ணை | 6.04 |
| விழுப்புரம் | சேலம் | 9 | வெள்ளிமலை | கலப்பின பட்டுப்பண்ணை | 6.56 |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.01 |
| | | 11 | ராமாபுரம் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 3.58 |
| திருப்பூர் | உடுமலைப் பேட்டை | 12 | மைவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.10 |
| காஞ்சிபுரம் | வாணியம்பாடி | 13 | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் | 8.05 |
| வேலூர் | வாணியம்பாடி | 14 | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.70 |
| திருவண்ணா மலை | திருவண்ணா மலை | 15 | நாடானூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.88 |
| | | 16 | புலியூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 7.99 |



| மாவட்டம் (இடவாரியாக) | உதவி இயக்குநர் (நிர்வாக கட்டுப்பாட்டில்) | வ. எண் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கடலூர் | விழுப்புரம் | 17 | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.00 |
| திருச்சி | திருச்சி | 18 | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.60 |
| | | 19 | கலிங்கம்பட்டி | மாதிரி பட்டுப்பண்ணை | 5.00 |
| | | 20 | கருக்கமடை | மாதிரி பட்டுப்பண்ணை | 2.11 |
| | | 21 | பச்சைமலை | கலப்பின பட்டுப்பண்ணை | 8.45 |
| | | 22 | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.00 |
| தஞ்சாவூர் | | 23 | நாஞ்சிக் கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் | 4.65 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 24 | சி.கே.புதூர் | மாதிரி பட்டுப்பண்ணை | 4.93 |
| சிவகங்கை | | 25 | குன்றக்குடி | மாதிரி பட்டுப்பண்ணை | 6.20 |
| | | 26 | ஒ.புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 10.00 |
| இராமநாதபுரம் | தேனி | 27 | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 4.36 |
| திருநெல் வேலி | தென்காசி | 28 | திருநெல்வேலி | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 1.88 |
| விருதுநகர் | | 29 | ஸ்ரீவில்லிபுத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.15 |
| | | 30 | செவலூர் | மாதிரி பட்டுப்பண்ணை | 12.00 |
| கன்னியா குமரி | | 31 | நாகர்கோவில்/ கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 3.10 |

## 5.5 இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டுப்புழு வளர்ப்பு பணிகளில் இளம்புழுக்களை தனியாக வளர்த்து பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்கள் “இளம்புழு வளர்ப்பு மையங்கள்” என அழைக்கப்படுகிறது. இளம்புழுக்கள் மிகுந்த கவனத்துடன், சுகாதாரமான தனி இளம்புழு வளர்ப்பு மனைகளில் வளர்க்கப்படுகின்றன. பட்டு முட்டைகள் அடைகாத்தலிலிருந்து பட்டுப்புழுக்களை இரண்டாம் தோலுரிப்பு வரை (பட்டுப்புழு, வளர்ச்சியின் காரணமாக உடல் அளவினை அதிகரித்திட பழைய தோலிலிருந்து வெளிவருதல்) வளர்த்திட 10 நாட்கள் ஆகும். இந்நிலையிலேயே விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட தகுந்ததாகும்.

வித்தகத்திலிருந்து பெறப்படும் பட்டு முட்டைகள் $25^0$ செல்சியஸ் வெப்பநிலையிலும் 80% ஈரப்பதத்திலும் அடைகாக்கப்படுகின்றன. பட்டு முட்டைகளிலிருந்து பொரித்த புழுக்கள் புழு வளர்ப்பு தட்டுகளுக்கு மாற்றப்பட்டு சரியான இடைவேளைகளில், மிகவும் சிறியதாக வெட்டப்பட்ட தரமான மல்பரி இலைகள் பட்டுப்புழுக்களுக்கு உணவாக அளிக்கப்பட்டும், பட்டுப்புழு வளர்ப்பு அறையில் இளம் பட்டுப்புழுக்களுக்கு தேவையான வெப்பநிலையும் (27–$28^\circ$ செல்சியஸ்) மற்றும் ஈரப்பதமும் (80–90%) அளித்தும் பராமரிக்கப்படுகிறது. பட்டுப்புழுக்களுக்கு போதுமான இட வசதி



அளித்தல், சுத்தம் செய்தல், தோலுரிப்பின் போது கவனம் செலுத்துதல் போன்றவை உறுதிப்படுத்தப்படுகின்றன. மேலும் தேவையான அளவு படுக்கை கிருமிநாசினிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

பட்டு முட்டைகளுக்குப் பதிலாக இளம் பட்டுப்புழுக்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதன் மூலம் அதிக அளவில் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் வழக்கமாக பட்டுப்புழுவின் வாழ்க்கை சுழற்சியில் முட்டைகளிலிருந்து பட்டுக்கூடு நிலை வரை தேவைப்படும் 25 முதல் 27 நாட்களுக்கு பதிலாக இளம்புழுக்களாக பெற்று வளர்த்து பட்டுக்கூடு பெற 16 முதல் 18 நாட்கள் மட்டுமே ஆவதால், விவசாயிகள் கூடுதல் எண்ணிக்கையில் புழுவளர்ப்புகள் மேற்கொண்டு அதிக வருவாய் ஈட்டிட வழிவகுக்கிறது. இளம் புழுவளர்ப்பு மையங்களில் இளம்புழுக்கள் தகுந்த சுகாதாரத்துடன், தேவையான தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்துடன் பேணி வளர்க்கப்படுவதால் மட்டுமே இது சாத்தியமாகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் பட்டு முட்டைத் தொகுதிகளில் 32 சதவீதம் இளம் பட்டுப்புழுக்களாக விநியோகம் செய்யப்படுவது தேசிய அளவில் உயர்ந்த அளவு ஆகும். இச்சாதனையினை மேலும் மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இளம்புழுக்களை வளர்த்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட தற்பொழுது மாநிலத்தில் இதற்கெனவே உள்ள 4 அரசு இளம்புழு வளர்ப்பு மையங்கள் மற்றும் 18 அரசு பட்டுப்பண்ணைகளும் செயல்பட்டு வருகின்றன.

**இளம்புழு வளர்ப்பு மையங்கள்**

| வ. எண் | மாவட்டம் (இடவாரியாக) | உதவி இயக்குநரின் தலைமையிடம் (நிர்வாக கட்டுபாட்டில்) | அரசு பட்டுப் பண்ணையின் பெயர், நிலை | |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை | கலப்பின பட்டுப்பண்ணை |
| 2 | தருமபுரி | தருமபுரி | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 3 | தருமபுரி | பென்னாகரம் | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 4 | ஈரோடு | தாளவாடி | ராமாபுரம் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 5 | சேலம் | சேலம் | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 6 | வேலூர் | வாணியம்பாடி | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 7 | காஞ்சிபுரம் | வாணியம்பாடி | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 8 | வேலூர் | திருவண்ணாமலை | புலியூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 9 | வேலூர் | திருவண்ணாமலை | நாடானூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 10 | கடலூர் | விழுப்புரம் | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 11 | திருச்சி | திருச்சி | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 12 | திருச்சி | திருச்சி | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 13 | திருச்சி | திருச்சி | கலிங்கம்பட்டி | மாதிரி பட்டுப்பண்ணை |
| 14 | திருச்சி | திருச்சி | கருக்கமடை | மாதிரி பட்டுப்பண்ணை |
| 15 | தஞ்சாவூர் | திருச்சி | நாஞ்சிக் கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் |



| வ. எண் | மாவட்டம் (இடவாரியாக) | உதவி இயக்குநரின் தலைமையிடம் (நிர்வாக கட்டுபாட்டில்) | அரசு பட்டுப் பண்ணையின் பெயர், நிலை | |
|---|---|---|---|---|
| 16 | திண்டுக்கல் | திண்டுக்கல் | சி.கே.புதூர் | மாதிரி பட்டுப்பண்ணை |
| 17 | சிவகங்கை | திண்டுக்கல் | ஒ. புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 18 | இராமநாதபுரம் | தேனி | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 19 | திருநெல் வேலி | தென்காசி | திருநெல்வேலி (இ) வி.எம்.சத்திரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 20 | விருதுநகர் | தென்காசி | செவலூர் | மாதிரி பட்டுப்பண்ணை |
| 21 | விருதுநகர் | தென்காசி | ஸ்ரீவில்லிபுத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 22 | கன்னியா குமரி | தென்காசி | நாகர்கோவில்/ கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |

இவை தவிர, 22 பெரிய அளவிலான தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களும் மாநிலத்தில் செயல்படுகின்றன. அதிகரித்துவரும் இளம்புழுக்களின் தேவையினை கருத்தில் கொண்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்ட உதவியுடன் 10 சிறிய அளவிலான தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளது.

2012–2013ஆம் ஆண்டில் மேலும் 100 சிறிய அளவிலான தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இம்மையங்கள் பட்டு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை கொண்டு செல்லும் அமைப்புகளாக மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.



**பட்டுப்பூச்சி முட்டை இடுதல்**



இளம் பட்டுப்புழு வளர்ப்பு



## 5.6 அரசு பட்டுக்கூடு அங்காடிகள்

ஒசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 இடங்களில் செயல்படும் விதைப் பட்டுக்கூடு அங்காடிகளில், உள்நாட்டின மற்றும் இருசுழற்சியின விதைக்கூடுகள் வர்த்தகம் நடைபெற்று வருகிறது. விதைப் புழுவளர்ப்பாளர்களால் விதைக் கூடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த விதைக் கூடுகள் வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைகள் உற்பத்தி செய்வதற்காக, வித்தகங்களால் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இவை தவிர, மாநிலத்தில் கூடுதலாக 19 இடங்களில் செயல்படும் பட்டுக்கூடு அங்காடிகளில், விவசாயிகளால் கொண்டு வரப்படும் நூற்புக்கான பட்டுக்கூடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. பட்டுக்கூடுகளின் தர அடிப்படையில், அதற்கான அடிப்படை விலை, குழு உறுப்பினர்களான பட்டுக்கூடு அங்காடி அலுவலர் மற்றும் பயனாளிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. அரசு அலகுகளும், தனியார் பட்டு நூற்பாளர்களும் வெளிப்படையான ஏலத்தில் பங்கு கொண்டு பட்டுக்கூடுகளை கொள்முதல் செய்ய அனுமதிக்கப் படுகின்றனர்.

**அரசு பட்டுக்கூடு அங்காடிகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநரின் தலைமையிடம் | வ. எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | ஒசூர் | விதை |
| | ஒசூர் | 2 | ஒசூர் | நூற்பு |
| | தேன்கனிக் கோட்டை | 3 | தேன்கனிக் கோட்டை | விதை |
| | கிருஷ்ணகிரி | 4 | கிருஷ்ணகிரி | நூற்பு |
| தருமபுரி | பென்னாகரம் | 5 | பென்னாகரம், பாலக்கோடு | நூற்பு |
| | தருமபுரி | 6 | தருமபுரி | நூற்பு |
| சேலம் | சேலம் | 7 | சேலம் | நூற்பு |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 8 | கோயம்புத்தூர் | விதை |
| | | 9 | கோயம்புத்தூர் | நூற்பு |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | நூற்பு |
| | ஈரோடு | 11 | ஈரோடு | நூற்பு |
| திருப்பூர் | உடுமலைப் பேட்டை | 12 | உடுமலைப்பேட்டை | நூற்பு |
| வேலூர் | வாணியம்பாடி | 13 | வாணியம்பாடி | நூற்பு |
| திருச்சி | திருச்சி | 14 | திருச்சி | நூற்பு |
| புதுக்கோட்டை | திருச்சி | 15 | புதுக்கோட்டை | நூற்பு |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 16 | திண்டுக்கல் | நூற்பு |
| | | 17 | பழனி@சி.கே.புதூர் | நூற்பு |
| சிவகங்கை | | 18 | சிவகங்கை | நூற்பு |
| தேனி | தேனி | 19 | தேனி | நூற்பு |
| திருநெல்வேலி | தென்காசி | 20 | நன்னகரம் | நூற்பு |
| விருதுநகர் | | 21 | ஸ்ரீவில்லிபுத்தூர் | நூற்பு |
| கன்னியாகுமரி | | 22 | நாகர்கோவில் | நூற்பு |



## 5.7 அரசு பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுக்கூடு அறுவடைக்குப் பின் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு உதவும் வகையில், இத்துறையால் செயல்படுத்தப்படும் **8** பட்டு நூற்பு அலகுகளும், **3** பட்டு முறுக்கேற்றும் அலகுகளும், புதிய தொழில்முனைவோர்கள் இத்தொழில்களைக் கற்றுக் கொள்ள உதவும் மாதிரி அலகுகளாகச் செயல்படுகின்றன.

**பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள்**

| மாவட்டம் (இடவாரியாக) | உதவி இயக்குநரின் தலைமையிடம் (நிர்வாக கட்டுபாட்டில்) | வ. எண் | அரசு அலகுகளின் பெயர் | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஒசூர் | 1 | ஒசூர் | பட்டு நூற்பகம் |
| | | 2 | ஒசூர் | முறுக்கேற்றும் அலகு |
| சேலம் | சேலம் | 3 | சேலம் | பட்டு நூற்பகம் |
| | | 4 | சேலம் | முறுக்கேற்றும் அலகு |
| ஈரோடு | தாளவாடி | 5 | தாளவாடி | பட்டு நூற்பகம் |
| வேலூர் | வாணியம்பாடி | 6 | வாணியம்பாடி | பட்டு நூற்பகம் |
| திருநெல்வேலி | தென்காசி | 7 | நன்னகரம் | பட்டு நூற்பகம் |
| | | 8 | நன்னகரம் | முறுக்கேற்றும் அலகு |
| கன்னியாகுமரி | தென்காசி | 9 | கோணம் | பட்டு நூற்பகம் |
| சிவகங்கை | திண்டுக்கல் | 10 | சிவகங்கை | பட்டு நூற்பகம் |
| புதுக்கோட்டை | திருச்சி | 11 | புதுக்கோட்டை | பட்டு நூற்பகம் |



பட்டுக்கூடு அங்காடி (தருமபுரி)



பட்டு நூற்பு அலகு – பலமுனை நூற்பு (தருமபுரி)




## 5.8 தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஒசூர்

இத்துறையின், களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்காகவும், புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள இளநிலை ஆய்வாளர்கள், பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஒசூரில் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையமானது பட்டுத் தொழிலின் நவீனத் தொழில் நுட்பங்களை பட்டு விவசாயிகளுக்கும், பட்டு நூற்பாளர்களுக்கும் கொண்டு செல்ல உதவிடும் பொருட்டு, “பட்டு மலர்” என்ற பட்டு வளர்ச்சித்துறையின் மாத இதழினையும் வெளியிட்டு வருகிறது.

## 5.9 அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்

பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டு நூலினை விற்பதற்கான தகுந்த சந்தை வாய்ப்புகள் கிடைப்பதற்காக, **1991**ஆம் ஆண்டு முதல் பட்டு பரிமாற்றகம் ஒன்று காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது. இப் பட்டுப் பரிமாற்றகத்திற்கு (Silk Exchange) விற்பனைக்காக கொண்டுவரப்படும் அனைத்து பட்டு நூல் தொகுதிகளும்,



**பட்டு முறுக்கேற்றுதல் (சேலம்)**



**பட்டு நூல் ஏலம்**
**(அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்)**



தரப்பரிசோதனை செய்யப்பட்டு, தரத்தின் அடிப்படையில் அடிப்படை விலை நிர்ணயிக்கப்படுகிறது. தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் (டான்சில்க்), திறமையான நெசவாளர்கள், பட்டு முறுக்காளர்கள் வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று கச்சாப்பட்டினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுப் பரிமாற்றகத்தில், பட்டு நூல் விற்பனை செய்தமைக்கான தொகை, நூற்பாளர்களுக்கு மின்னணு வர்த்தக சேவை (ECS) மூலமாக உடனே வழங்கப்படுகிறது. அண்ணா பட்டு பரிமாற்றகம், இடைத்தரகர்களின் தலையீட்டினை வெற்றிகரமாக நீக்கி, பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் பட்டு நுகர்வோர்களிடையே நேரடி பரிமாற்றத்தினை ஏற்படுத்தும் தளமாக விளங்குகிறது.

## 5.10 டான்சில்க், காஞ்சிபுரம்


தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (டான்சில்க்), தமிழ் நாட்டிலுள்ள பட்டுக் கூட்டுறவு சங்கங்களின் தலைமை கூட்டுறவு இணையமாக, காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு, 1978ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த இணையம், காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து அதிக அளவு கச்சாப்பட்டினை கொள்முதல் செய்கிறது. ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும்

சேலம் ஆகிய இடங்களில் இந்த இணையத்தின் கிளைகள் செயல்பட்டு வருகிறது. பட்டு நூற்பாளர், முறுக்காளர் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகியோர் இதில் உறுப்பினர்களாவர்.

இந்நிறுவனம், நியாயமான விலையில் தரமான முறுக்கேற்றிய பட்டினை, பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சான்று பெற்ற சர்வோதய சங்கங்கள் போன்ற நிறுவனங்களுக்கு விநியோகம் செய்கிறது. முறுக்கேற்றிய பட்டு, இங்கே புடவைகளாகவும், வேட்டிகளாகவும் மற்றும் இதர பட்டுத் துணிகளாகவும் நெசவு செய்யப்பட்டு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் அங்காடிகள் மற்றும் தனியார் அங்காடிகள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது.



## 6. துறை செயல்பாட்டிற்கான வழி முறைகள்



## 7. தமிழ்நாட்டில் மல்பரி சாகுபடி

2013–2014ஆம் ஆண்டில் கூடுதலாக 5,000 ஏக்கர் அளவில் மல்பரி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சுமார் 6,000 ஏக்கர் பரப்பில் மல்பரி கூடுதலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

2014–2015ஆம் ஆண்டில் கூடுதலாக 5,000 ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்ய உத்தேசிக்கப்பபட்டு திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. வெண்பட்டு / கலப்பின பட்டு உற்பத்தி

கலப்பின (மஞ்சள்) பட்டுக்கூடுகளின் பட்டு இழையின் நீளம் 700–800 மீட்டர் மட்டுமே. கலப்பின பட்டுக் கூடுகள், ஒரு கிலோ பட்டு நூல் உற்பத்திக்கு அதிக அளவு கூடுகள் தேவைப்படுதல், குறைந்த எடையுள்ள பட்டுக்கூடு ஓடு, குறைவான பட்டு விழுக்காடு, தரம் குறைந்த இழை ஆகிய காரணங்களால் கலப்பின பட்டு கூடுகள் சற்றே தரம் குறைவானதாக உள்ளன. இதனால் இந்த கலப்பின கச்சாப்பட்டு நூல் விசைத்தறியில் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இவற்றை நிவர்த்தி செய்யும் வண்ணம், வெண்பட்டு இரகங்கள் உருவாக்கப்பட்டன. ஒரு வெண் பட்டுக்கூட்டிலுள்ள பட்டு இழையின் நீளம் 1,000–1,500 மீட்டர் ஆகும். வெண்பட்டுநூல், கலப்பின மஞ்சள் பட்டு நூலை விட அதிக வலுவுடனும், நீட்சித் தன்மையுடனும் இருப்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுகிறது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பட்டு, வெண்பட்டு இரகமாகும். வெண்பட்டுக்காக சீனாவை சார்ந்துள்ள நிலையினை குறைத்திடும் வகையில், வெண்பட்டு உற்பத்தியினை அதிகரிக்க மத்திய பட்டு வாரியம் ஊக்கம் அளித்து வருகிறது.

2013–2014ஆம் ஆண்டில் மொத்த பட்டு உற்பத்தியான 1,120.16 மெட்ரிக் டன்னில் 710.63 மெட்ரிக் டன் வெண்பட்டு நூலும், 409.53 மெட்ரிக் டன் கலப்பின பட்டு நூலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. **இந்தியாவில் வெண்பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு முன்னிலை பெற்ற மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.**

## 9. பயிர் காப்பீடு

பட்டுப்புழு ஒரு குளிர் இரத்தப் உயிரினமாக இருப்பதால் நுண்கிருமிகளாலும், தட்ப வெப்ப மாறுதலாலும் அதிக அளவில் நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகிறது. இதற்கு இரை விழுங்கிகள் உள்ளன. மேலும் சில பூச்சிகள் இவற்றை உணவு மற்றும் பிற காரணங்களுக்காக தாக்குகின்றன. இவையனைத்தும் பட்டுப்புழு வளர்ப்பில் இழப்பினை ஏற்படுத்துகின்றன. இதனைத் தவிர்க்கவும், விவசாயிகளிடையே பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ள ஊக்கப்படுத்தவும், பட்டு விவசாயிகளுக்கு

பயிர்க்காப்பீடு என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பட்டு விவசாயிகளுக்கு 90 சதவீதம் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. 10,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு விவசாயி 150 பட்டு முட்டைகள் வளர்ப்பு செய்ய, சுமார் ரூ.350/– காப்பீட்டுத் தொகையாக செலுத்தப்படுகிறது. காப்பீடு நிறுவனம், புழு வளர்ப்பு கேடு அடையும் நிகழ்வில், பட்டு விவசாயிகளுக்கு அதன் வயது அடிப்படையில், இழப்பீட்டுத் தொகை வழங்கும்.

## 10. மருத்துவக் காப்பீடு

பட்டு விவசாயிகள், பட்டு தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் "பட்டு விவசாயிகள், பட்டுத் தொழிலாளர்கள் உடல் நலக் காப்பீடு திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளின் குடும்பங்கள், தேர்வு செய்யப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சைகளைப் பெறலாம். ஆண்டொன்றிற்கு, ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ரூ.20,000/– வரை புறநோயாளி மற்றும் உள்நோயாளியாக மருத்துவ சிகிச்சை பெறலாம். இத்திட்டத்தில், ஒரு விவசாயிக்கான பங்குத் தொகை ரூ.1,000/– ஆகும். இதில் ரூ.50/– பயனாளியின் பங்களிப்பாகவும். மீதமுள்ள 95 சதவீத பங்குத் தொகை அரசாலும் ஏற்கப்படுகிறது.



## 11. சாதனைகள்


**தமிழ்நாடு தேசிய அளவில் கீழ்க்கண்ட இனங்களில் முதல் நிலையில் உள்ளது.**

- 100 முட்டைத் தொகுதிகளுக்கான சராசரி பட்டுக்கூடு உற்பத்தித்திறன் 71.5 கிலோ கிராம் ஆகும்.
- மொத்த முட்டைத் தொகுதிகளில் 32 சதவீதம் இளம்புழுக்களாக வளர்த்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.
- தொகுப்பு அபிவிருத்தித் திட்டம்.
- மொத்த பட்டு உற்பத்தியில், 63.45 விழுக்காடு வெண்பட்டு உற்பத்தியாகும். தமிழ்நாடு வெண்பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக உள்ளது.


## 12. நிதி ஒதுக்கீடு

2013–2014ஆம் ஆண்டில் ரூ.3,129.36 இலட்சம் மதிப்பிலான பட்டு வளர்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

| நிதி ஆதாரம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| மத்திய பட்டு வாரியத்தின் பங்கு | 1,337.84 |
| மாநில அரசின் பங்கு | 839.44 |
| பயனாளிகளின் பங்கு | 952.08 |
| **மொத்தம்** | **3,129.36** |





100 முட்டை தொகுதிகளுக்கு பட்டுக்கூடு உற்பத்தித் திறன்





தமிழ்நாட்டில் இளம்பட்டுப்புழுக்கள் விநியோகம்






தொகுப்பு கிராமங்களில் 100 பட்டுமுட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக்கூடு அறுவடை




வெண்பட்டு உற்பத்தி சதவீதம் (மொத்த பட்டு உற்பத்திக்கு)

மேற்கண்டவற்றுடன், 2013–2014ஆம் ஆண்டில் மத்திய பட்டு வாரியத்தால் கீழ்க்காணும் கூடுதல் திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

| நிதி ஆதாரம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| மத்திய பட்டு வாரியத்தின் பங்கு | 304.80 |
| மாநில அரசின் பங்கு | 422.13 |
| பயனாளிகளின் பங்கு | 377.58 |
| **மொத்தம்** | **1,104.51** |

## 13. கிரியா ஊக்கித்திட்டத்தின் கீழ் 2014–2015ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

பட்டு வளர்ச்சித்துறை 2014–2015ஆம் ஆண்டில் கிரியா ஊக்கித்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த உள்ளது. கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ள முக்கிய திட்டங்களும், திட்டங்கள் வாரியாக மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பயனாளிகளின் நிதிப்பங்கீட்டு விபரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | அலகு மதிப்பீடு (ரூபாய்) | மத்திய பட்டு வாரிய பங்குத் தொகை (ரூபாய்) | மாநில அரசு பங்குத் தொகை (ரூபாய்) | பயனாளி பங்குத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| **(அ)** | **விதைப் பிரிவு** | | | | |
| 1 | ஏற்கனவே உள்ள விதைப்பண்ணைகள் மற்றும் வித்தகங்களை மேம்படுத்துவதற்கான உதவிகள் | 3,50,000 | 1,75,000 50% | 1,75,000 50% | - |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | அலகு மதிப்பீடு (ரூபாய்) | மத்திய பட்டு வாரிய பங்குத் தொகை (ரூபாய்) | மாநில அரசு பங்குத் தொகை (ரூபாய்) | பயனாளி பங்குத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| **(ஆ)** | **பட்டுக்கூடு பிரிவு** | | | | |
| 1 | மல்பரி நடவு அபிவிருத்தித் திட்டம் | 14,000 ஓர் ஏக்கருக்கு | 7,000 50% | 3,500 25% | 3,500 25% |
| 2 | தரமான நோய் தடுப்பு பொருட்கள் வழங்குதல் | 5,000 ஒரு விவசாயிக்கு | 2,500 50% | 1,250 25% | 1,250 25% |
| 3 | நீர்ப்பாசனம் மற்றும் நீர் சேமிப்பு அமைப்புகள் நிறுவ உதவி அளித்தல் | 30,000 ஓர் ஏக்கருக்கு | 15,000 50% | 15,000 50% | - - |
| 4 | புழுவளர்ப்பு உபகரணங்கள் | 70,000 ஒரு விவசாயிக்கு | 35,000 50% | 17,500 25% | 17,500 25% |
| 5 | தனியாக பட்டுப்புழு வளர்ப்பு குடில் அமைக்க உதவி அளித்தல் | | | | |
| | நிலை 1 (1500 சதுர அடிக்கு மேல்) | 2,75,000 ஒரு விவசாயிக்கு | 27,500 10% | 55,000 20% | 1,92,500 70% |
| | நிலை 2 (1000 – 1500 சதுர அடி) | 1,75,000 ஒரு விவசாயிக்கு | 35,000 20% | 52,500 30% | 87,500 50% |
| | நிலை 3 (700 – 1000 சதுர அடி) | 90,000 ஒரு விவசாயிக்கு | 31,500 35% | 31,500 35% | 27,000 30% |
| 6 | தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைத்தல் | 6,00,000 ஓர் அலகுக்கு | 2,10,000 35% | 2,10,000 35% | 1,80,000 30% |
| 7 | பட்டு பல்நோக்கு ஆலோசனை மையம் அமைக்க உதவியளித்தல் | 3,00,000 ஓர் அலகுக்கு | 1,50,000 50% | 75,000 25% | 75,000 25% |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | அலகு மதிப்பீடு (ரூபாய்) | மத்திய பட்டு வாரிய பங்குத் தொகை (ரூபாய்) | மாநில அரசு பங்குத் தொகை (ரூபாய்) | பயனாளி பங்குத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| **(இ)** | **பட்டுக்கூடுக்கு பிந்தைய நிலை பிரிவு** | | | | |
| | **பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றுதல்** | | | | |
| 1 | சான்றளிக்கப்பட்ட பலமுனை பட்டு நூற்பு அலகுகள் நிறுவ பட்டு நூற்பாளர்களுக்கு உதவி அளித்தல் 10 ஏனங்கள் | 14,05,000 ஓர் அலகுக்கு | 7,02,500 50% | 5,62,000 40% | 1,40,500 10% |
| 2 | தரமான பட்டு நூல் உற்பத்திக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 100 ஒரு கிலோவுக்கு | 50 50% | 50 50% | |
| 3 | பட்டு முறுக்கேற்றும் அலகு அமைத்தல் (400 கதிர்கள்) | 7,86,000 ஓர் அலகுக்கு | 5,89,500 75% | - - | 1,96,500 25% |
| | **பட்டு நெசவு** | | | | |
| 1 | பட்டு கைத்தறிகளை மேம்படுத்துதல் | 15,000 ஒரு தறிக்கு | 7,500 50% | 3,750 25% | 3,750 25% |
| 2 | கணினி மூலம் ஆடை வடிவமைப்பு | 3,96,000 ஓர் அலகுக்கு | 1,98,000 50% | 99,000 25% | 99,000 25% |
| **(ஈ)** | **திட்ட செயல்பாடுகளுக்கான சேவை பிரிவு** | | | | |
| 1 | பயனாளிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் | | | | |
| அ | விவசாயிகளுக்கு (ஒசூர் பட்டுப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி | 5,000 ஒரு விவசாயிக்கு | 2,500 50% | 2,500 50% | - - |
| ஆ | பட்டு நூற்பு தொழிலாளருக்கு | 5,000 ஒரு பட்டு நூற்பு தொழிலா–ளருக்கு | 2,500 50% | 2,500 50% | - - |
| 2 | பட்டு விவசாயிகள் / தொழிலாளர்களுக்கான உடல் நலக்காப்பீட்டுத் திட்டம் | 1000 ஒரு தொழிலா–ளருக்கு | 760 | 190 | 50 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | அலகு மதிப்பீடு (ரூபாய்) | மத்திய பட்டு வாரிய பங்குத் தொகை (ரூபாய்) | மாநில அரசு பங்குத் தொகை (ரூபாய்) | பயனாளி பங்குத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 3 | பட்டுப் புழுவளர்ப்பு, புழுவளர்ப்பு குடில் மற்றும் தனி நபர் விபத்து காப்பீடு திட்டம் | 5 1 முட்டைத் தொகுதிக்கு | 2.50 50% | 2.00 40% | 0.50 10% |

## 13.1 புதுமையான திட்டங்கள்

மத்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மத்திய பட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த திட்டங்கள் அவற்றிற்கான நிர்ணயிக்கப்பட்ட அலகு முன்மதிப்பீடுகளுடன், கிரியா ஊக்கித்திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மத்திய பட்டு வாரியம், ‘இலகு நிதி’யின் கீழ் மேலும் சில புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. மாநில அரசுகள் சேவைப்பணிகளின் தரத்தினை மேம்படுத்தவும், விரிவாக்கம் மற்றும் கண்காணிப்பு பணிகளை வலுப்படுத்தவும், பயனாளிகளுக்கு அளிக்கப்படும் சேவைகளின் திறனை மேம்படுத்தவும், கிரியா ஊக்கித் திட்டத்தில் இடம் பெறாத திட்டங்களை மாநில அரசின் குறிப்பிட்ட தேவைக்கேற்ப திட்டமிட்டு செயல்படுத்திக்கொள்ள மத்திய பட்டு வாரியம் ‘இலகு நிதி’ திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கியுள்ளது.

2013–2014ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதுமையான திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 13.1(அ) வெண்பட்டு முட்டைத் தொகுதிகளையும் இளம்புழுக்களையும் எடுத்துச் செல்ல உதவிகள்

தற்பொழுது மொத்த முட்டைத் தொகுதிகளில் 32 சதவீதம் இளம்புழுக்களாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்ட 22 பெரிய அளவிலான தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களும், 110 மிகச்சிறிய தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களும், விவசாயிகளுக்கு இளம்புழுக்களை வளர்த்து விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதில் பெரும்பாலான மையங்கள் வெண்பட்டு கலப்பின பட்டு முட்டைகளையே வளர்த்து இளம்புழுக்களாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்கின்றன. இம்மையங்களால் விவசாயிகளின் பணிச்சுமை வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, முட்டைத் தொகுதிகளுக்கான விலைக்கு மேல், 100 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு இளம்புழு வளர்ப்புக் கட்டணமாக ரூ.1,000/– முதல் ரூ. 2,000/– வரை பெறப்படுகிறது. இதன்படி, பட்டு விவசாயிகள் இளம்புழு வளர்ப்புக் கட்டணமாக ரூ.2,000/– வரை இளம்புழு வளர்ப்பு மையங்களுக்கு செலுத்துகிறார்கள். இளம்புழு வளர்ப்பு மையங்களுக்கு சிறு நிதியுதவி அளிக்கப்பட்டால்



இளம்புழுக்களை விநியோகம் செய்கையில் விவசாயிகளிடமிருந்து சற்றே குறைவான தொகையினை வசூலிக்கலாம். இது விவசாயிகளிடையே இளம்புழு வளர்ப்பு ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்து, பட்டின் தரம் மற்றும் விவசாயிகளின் வருவாயினை பெருக்கிடவும் வழிவகுக்கும்.

மேற்கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக பட்டு முட்டைகளை எடுத்துச் செல்ல ரூ.100/– ஊக்கத் தொகையும், இளம்புழுக்களை எடுத்துச் செல்ல போக்குவரத்து செலவிற்காக ரூ.500/– வழங்கப்படுகிறது. 100 பட்டுமுட்டைத் தொகுதிகளுக்கு மொத்தம் ரூ.600/– ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இளம்புழு வளர்ப்பு மையங்கள் மூலம் 30 இலட்சம் பட்டு முட்டைகள் அளவிற்கு இளம்புழுக்களாக விநியோகம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக தேவைப்படும் ரூ.180.00 இலட்சத்தில் 30 சதவீத பங்குத் தொகையாக ரூ.54.00 இலட்சம் மத்திய பட்டு வாரியத்தால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசினால் 70 சதவீத பங்குத் தொகையாக ரூ.126.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | பட்டு முட்டைத் தொகுதிகள் (இலட்சத்தில்) | நிதி உதவி (ரூபாய்) | (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரிய பங்கு 30% | மாநில அரசின் பங்கு 70% | மொத்த நிதி |
| 1 | வெண் பட்டு முட்டைகளை எடுத்துச்செல்ல ஊக்கத்தொகை | 30.00 | 100 | 9.00 | 21.00 | 30.00 |
| 2 | வெண் பட்டு இளம் புழுக்களை எடுத்துச் செல்ல போக்குவரத்து செலவிற்காக ஊக்கத் தொகை | | 500 | 45.00 | 105.00 | 150.00 |
| | மொத்தம் | 30.00 | 600 | 54.00 | 126.00 | 180.00 |

## 13.1(ஆ) ஓலையால் வேயப்பட்ட பட்டுப்புழு வளர்ப்பு குடில் கூரைகளைப் புதுப்பிக்க உதவியளித்தல்

கிரியா ஊக்கித் திட்டமானது மாநிலத்தில் 9–வது ஐந்தாண்டு திட்ட காலம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 11வது ஐந்தாண்டு திட்ட காலம் வரை சுமார் 8,300 பட்டுப்புழு வளர்ப்பு குடில்கள் திட்ட உதவியுடன் கட்டப்பட்டுள்ளன. கிரியா ஊக்கித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் தான் பட்டு விவசாயிகளால் நல்ல தனி புழுவளர்ப்புக் குடில் கட்ட முடிந்தது.



தனி பட்டுப்புழு வளர்ப்பு குடில்களை கட்டிய பின்னர் தான் விவசாயிகளால் தரமான பட்டுக்கூடுகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய முடிந்தது. முந்தைய ஐந்தாண்டு திட்ட கால நிதி ஆண்டுகளில் பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட மிகக்குறைந்த அளவிலேயே உதவிகள் வழங்கப்பட்டது. நிலை–1 புழுவளர்ப்பு குடிலுக்கு வழங்கப்பட்ட அதிகபட்ச நிதி உதவி ரூ.25,000/– மட்டுமே. எனவே, விவசாயிகள் எளிய பட்டுப்புழு வளர்ப்பு குடில்களையே கட்டினர். ஆனால் தற்போது நிலை–1 புழுவளர்ப்பு குடிலுக்கு நிதி உதவி ரூ.82,500/– ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட புழுவளர்ப்பு குடில்கள், புழுவளர்க்க இயலாத அளவிற்கு சேதமடைந்துள்ளதால் ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல் மற்றும் பிற இடங்களைச் சேர்ந்த பாரம்பரியமிக்க விவசாயிகள், ஓலையால் வேயப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கூரைகளைப் புதுப்பிக்க நிதி உதவிகள் வழங்குமாறு கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.

இதற்காக நிதி உதவி அளிக்கப்பட்டால், அது அவர்களது புழுவளர்ப்புக்குடில் கூரைகளைப் புதுப்பித்து, அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட குடில்களில், விவசாயிகளால் உயர் தரமான

பட்டுக்கூடுகளை அதிக அளவில் உற்பத்தி செய்யும் வகையில், பட்டுப்புழு வளர்ப்பினை தொடர முடியும்.

பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை எவ்வித இடைவெளியுமின்றி தொடர்ந்து மேற்கொண்டு வரும் 470 பட்டு விவசாயிகளுக்கு மட்டுமே இதற்கான நிதியுதவி வழங்கப்படுகிறது. பட்டுவிவசாயிகளுக்கு வழங்கிடும் நிதியுதவி விபரங்கள் பின்வருமாறு.

| வ. எ ண். | அலகு நிலை | எண்ணிக்கை | அலகு மதிப்பீடு ரூ | ரூபாய் லட்சத்தில் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரிய பங்கு 30% | மாநில அரசின் பங்கு 35% | பயனாளி பங்கு 35% | மொத்தம் |
| 1) | நிலை–1 | 170 | 75,000 | 38.250 | 44.625 | 44.625 | 127,500 |
| 2) | நிலை–II | 230 | 50,000 | 34.500 | 40.250 | 40.250 | 115.000 |
| 3) | நிலை–III | 70 | 35,000 | 7.350 | 8.575 | 8.575 | 24.500 |
| | **மொத்தம்** | **470** | | **80.100** | **93.450** | **93.450** | **267.000** |

இத்திட்டத்திற்காக தேவைப்படும் மொத்த நிதியான ரூ.267.00 இலட்சத்தில் மத்திய பட்டு வாரியம் 30 சதவீத பங்கான ரூ.80.10 இலட்சத்தினை ஏற்கனவே ஒப்பளித்துள்ளது. மாநில அரசு அதன் பங்காக 35 சதவீத தொகை ரூ.93.45 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒப்பளித்துள்ளது.



## 13.1.(இ) மாநிலத்தில் 3 சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை ஏற்படுத்துதல்

வெண்பட்டு உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாட்டில் 28 தொகுப்பு கிராமங்களில், 'தொகுப்பு அபிவிருத்தி திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. குழு கொள்கையினை பட்டு விவசாயிகளிடையே ஊக்குவிக்கும் வகையில் மாநிலத்தில் 3 சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் (ஒரு தொகுப்பு கிராமத்தில் ஒரு சமுதாய அடிப்படையிலான அமைப்பு வீதம்) பரிசோதனை அடிப்படையில் ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகளையும், தொழில்நுட்பங்களையும் பட்டு விவசாயிகளிடையே எடுத்துச் செல்லுதல், வெண்பட்டு உற்பத்தியினை பரவலாக்குதல், பயிற்சி, விரிவாக்கம், தரமான பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யும் வகையில் பட்டுவளர்ப்பு செயல்பாடுகளை சம காலத்தில் நிகழச்செய்தல், கடன் வசதி ஏற்படுத்துதல் போன்ற பட்டு வளர்ப்புத் தொழிலின் முக்கிய இடைவெளிகளைக் களைவதே சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை ஏற்படுத்துவதன் குறிக்கோளாகும். சமுதாய அடிப்படையிலான அமைப்புகள், மேற்கண்டுள்ள செயல்பாடுகளின் களப்பணியில் அரசு அமைப்பிற்கு உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு சமுதாய அடிப்படையிலான அமைப்பிலும், 10 ‘பட்டுவளர்ச்சி தொகுப்பு குழுக்கள்’ (Sericulture Cluster Group) ஏற்படுத்தப்படும். ஒரு பட்டு வளர்ச்சி தொகுப்பு குழுவில் குறைந்தபட்சம் 20 பட்டு விவசாயிகள் இருப்பர். பட்டு வளர்ச்சி தொகுப்பு குழுவின் ஒரு உறுப்பினர் ‘கிராம அளவிலான சேவை அளிப்பவராக’ செயல்பட ஊக்குவிக்கப்படுவார். 10 பட்டு வளர்ச்சி தொகுப்பு குழுக்களைக் கொண்ட ஒரு சமுதாய அடிப்படையிலான அமைப்பு (Community Based Organisation) 10 பட்டுவளர்ப்பு தொகுப்பு குழுக்களின் பிரதிநிதியாக 10 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ‘தொகுப்பு அளவிலான சங்கமாக’ (Cluster Level Association) செயல்படும். இதன் அடிப்படையில், தலா 20 பட்டு விவசாயிகளைக் கொண்டு, 30 பட்டு வளர்ப்பு தொகுப்பு குழுக்களுடன் கூடிய 3 சமுதாய அடிப்படையிலான அமைப்புகளாக, 3 தொகுப்பு அளவிலான குழுக்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதனை மாநிலத்தில் செயல்படுத்த மத்திய பட்டுவாரியம் 3 ஆண்டுகளுக்கு ரூ.61.69 இலட்சம் கிரியா ஊக்கித்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்து, முதல் ஆண்டிற்கான தனது பங்காக முதல் கட்டமாக ஏற்கனவே ரூ.30.24 இலட்சத்தை



விடுவித்துள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசு ரூ.22.296 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

## 13.2 கூடுதல் திட்டங்கள்

இயக்குநர், பட்டு வளர்ச்சித் துறை அவர்களின் பிரேரனையின் படி கீழ்கண்ட கூடுதல் திட்டங்கள் மத்திய பட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 13.2(அ) வித்தகங்களுக்கு சுழல் நிதி

மாநிலத்தில் உள்ள 11 வித்தகங்களில் ஒசூர், கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, கோயம்புத்தூர், திருச்சி, தென்காசி, தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 8 வித்தகங்கள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன.

இவ்வித்தகங்களின் செயல்பாட்டிற்கு நடைமுறை மூலதனம் (விதைக்கூடுகள் கொள்முதல் செய்தல் மற்றும், போக்குவரத்து செலவினம் ) மிக முக்கிய பங்கினை வகிப்பதால், சுழல் நிதி ஆதாரம் இந்த 8 வித்தகங்களுக்கு மிகவும் அவசியமாகும். வித்தகம் ஒன்றுக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 8 வித்தகங்களுக்கு சுழல் நிதியாக ரூ.40.00 இலட்சம் கோரப்பட்டது. மத்திய பட்டு வாரியம் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, 50 சதவீத பங்கான ரூ.20.00 இலட்சத்தை கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் விடுவித்துள்ளது. மாநில அரசு அதன்

பங்காக 50 சதவீத தொகை ரூ.20.00 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒப்பளித்துள்ளது.

| வ. எண். | வித்தகத்தின் பெயர் | உற்பத்தி செய்யப்படும் பட்டுமுட்டைகள் | ரூபாய் இலட்சத்தில் | | |
|---|---|---|---|---|---|
| | | | மத்திய பட்டு வாரிய பங்கு 50% | மாநில அரசின் பங்கு 50% | மொத்தம் |
| 1) | ஒசூர் | கலப்பினம் மற்றும் இரு சுழற்சியினம் | 2.50 | 2.50 | 5.00 |
| 2) | கிருஷ்ணகிரி | இரு சுழற்சியினம் | 2.50 | 2.50 | 5.00 |
| 3) | வாணியம்பாடி | கலப்பினம் | 2.50 | 2.50 | 5.00 |
| 4) | கோயம்புத்தூர் | இரு சுழற்சியினம் | 2.50 | 2.50 | 5.00 |
| 5) | திருச்சி | கலப்பினம் | 2.50 | 2.50 | 5.00 |
| 6) | தென்காசி | கலப்பினம் | 2.50 | 2.50 | 5.00 |
| 7) | தர்மபுரி | கலப்பினம் | 2.50 | 2.50 | 5.00 |
| 8) | ஈரோடு | கலப்பினம் | 2.50 | 2.50 | 5.00 |
| | மொத்தம் | | 20.00 | 20.00 | 40.00 |

## 13.2(ஆ) 10வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறுவப்பட்ட பலமுனை பட்டுநூற்பு இயந்திரங்களை நன்னிலைப் படுத்துதல்

12வது ஐந்தாண்டு திட்ட கால நெறிமுறைகளின்படி, மத்திய பட்டு வாரியம் 9வது மற்றும் 10வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறுவப்பட்ட பலமுனை பட்டுநூற்பு அலகுகளுக்கு கொதிகலன் மற்றும் மின்னாக்கி போன்ற உபகரணங்களைக் கொள்முதல் செய்து கொள்ளவும், அலகுகளில் உள்ள பலமுனை பட்டுநூற்பு இயந்திரங்களை நன்னிலைப் படுத்துவதற்காகவும் நிதி உதவி வழங்கிட ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கேற்ப 9 பலமுனை பட்டுநூற்பு அலகுகளுக்கு அவற்றின் திறன் மேம்பாட்டிற்காகவும், உற்பத்தித் திறன் மேம்பாட்டிற்காகவும் இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது. மத்திய பட்டு வாரியம் இத்திட்டத்திற்கு கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்துள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | அலகு மதிப்பீடு (ரூபாய்) | அலகுகள் (எண்) | நிதிப்பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் (50%) | மாநில அரசு (25%) | பயனாளி (25%) | மொத்த தொகை |
| அ) | கொதிகலன் (100 கி.கி. திறன்) | 1,76,500 | 8 | 7.060 | 3.530 | 3.530 | 14.120 |
| ஆ) | மின்னாக்கி (5 KVA திறன்) | 86,254 | 8 | 3.450 | 1.725 | 1.725 | 6.900 |
| இ) | இயந்திரங் களை நன்னிலைப் படுத்துதல் | 1,00,000 | 9 | 4.500 | 2.250 | 2.250 | 9.000 |
| | மொத்தம் | | | 15.010 | 7.505 | 7.505 | 30.020 |

## 13.2(இ) வெண்பட்டு உற்பத்திக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த, இறக்குமதியாகும் சீனப்பட்டிற்கு மாற்றாக உள்நாட்டில் உற்பத்தி

செய்யப்பட்ட தரமான பட்டு நுகர்வினை அதிகரிக்கவும், பட்டு நூற்பாளர் / பட்டு முறுக்காளர்களின் கரங்களை வலுப்படுத்தவும் பட்டுநூற்பு தொழில் முனைவோர்களால் தேர்வு செய்து அனுப்பப்படும் தொழிலாளர்களுக்குத் தேவையான நூற்பு பயிற்சி அளிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை துவக்கியுள்ளது. 10 ஏனங்கள் கொண்ட பலமுனை பட்டு நூற்பு இயந்திரங்கள் நிறுவிட 90 சதவீத தொகை அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. அதே போன்று பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவிட 75 சதவீத தொகை அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

பட்டு நூற்பாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்கள் தயாரித்து, காஞ்சிபுரத்தில் உள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் விற்பனை செய்யும் ஒரு கிலோ கிராம் வெண்பட்டு நூலுக்கு ரூ.100/– வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. அத்துடன் விசைத்தறி நெசவிற்கு ஏற்ற 2ஏ தர பட்டு நூல் கிலோவுக்கு ரூ.50/– வீதம் கூடுதல் ஊக்கத் தொகை 2013–2014ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

## 13.3 பட்டு வளர்ப்பு செயல்பாடுகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்துடன் ஒருமுகப்படுத்துதல்

பிற துறைகளான ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை போன்ற துறைகளுடன் பட்டு



வளர்ச்சித்துறை இணைந்து செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்ந்து செயலாற்றி வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைகளுக்கிணங்க மழை நீர் சேகரிப்பு ஆதாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாநிலத்தில் உள்ள அரசு பட்டுப்பண்ணைகளில், 50 பண்ணைக்குட்டைகளை 2013–2014ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தின்கீழ் செயல்படுத்திட அனுமதிக்கப்பட்டது.

இதேபோன்று, 'பசுமைப் போர்வை'யினை ஊக்கப்படுத்திட அரசு பட்டுப்பண்ணைகளில் மல்பரி மர நடவு மேற்கொள்வது அவசிமாகிறது. 2014–2015ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 37 அரசு பட்டுப்பண்ணைகளில் 43,500 மல்பரி மரக்கன்றுகளையும் 4,000 இதர மரக்கன்றுகளையும் நடவு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 2014–2015ஆம் ஆண்டில் 30 இலட்சம் மல்பரி நாற்றுகளை அரசு பட்டுப்பண்ணைகளில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 13.4 மேற்கு தொடர்ச்சிமலை அபிவிருத்தி திட்டம்

மேற்கு தொடர்ச்சிமலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி

மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2014–2015ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் முன்னோடி அலகுகளாகச் செயல்பட்டு வரும் பட்டு வளர்ச்சித்துறை அலகுகளை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களின் தலைமையில் உள்ள மாவட்ட குழுக்களால் முடிவு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்படும்.

## 13.5 மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பட்டுவளர்ப்பு தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2014–2015ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கவும் முன்னோடி அலகுகளாக செயல்பட்டு வரும் பட்டு வளர்ச்சித்துறை அலகுகளை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் / திட்ட இயக்குநர், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம், உதகை அவர்களால் திட்டப்பணிகள் முடிவு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்படும்.



# 14. தமிழகத்தில் பட்டுத்தொழில் மேலும் விருத்தியடைய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

## 14.1 பட்டுக்கூடு அறுவடைக்கு முந்தைய நிலை

(அ) தொழில் நுட்ப சேவை மையங்கள் மூலம் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தி, புதிய விவசாயிகளை ஊக்கப்படுத்தி பட்டுத் தொழிலில் ஈடுபடச் செய்தல்.

(ஆ) தரமான, அதிக மகசூல் தரும் மல்பரி இரகங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதை உறுதி செய்தல்.

(இ) மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளித்தல்.

(ஈ) விவசாயிகளுக்கு தரமான, நோயற்ற பட்டு முட்டைகள் விநியோகிப்பதை உறுதி செய்தல்.

(உ) பட்டு விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் மானிய உதவியளித்தல்.

(ஊ) பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய அங்காடி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(எ) பட்டு விவசாயிகளின் சமூகபாதுகாப்புக்காக பயிர் காப்பீடு மற்றும் உடல் நலக் காப்பீட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல்.

(ஏ) ஆதார விதைப் பண்ணைகள், இளம்புழு வளர்ப்பு மையங்கள் மற்றும் பட்டுக்கூடு அங்காடிகள் போன்ற அலகுகளின் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

## 14.2 பட்டுக்கூடு அறுவடைக்கு பிந்தைய நிலை

தமிழகத்தில் பட்டுக்கூடு அறுவடைக்கு பிந்தைய நிலையினை வலுப்படுத்த பின்வரும் பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ) புதிய பட்டு நூற்பு அலகுகளை நிறுவுதல்

(ஆ) தற்போதுள்ள அலகுகளின் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

(இ) புதிய முறுக்கேற்றும் மையங்கள் நிறுவுவதற்கு உதவி செய்தல்.

(ஈ) பட்டு கைத்தறிகளை மேம்படுத்த உதவியளித்தல்

(உ) கணினி உதவியுடன் கூடிய துணிநூல் வடிவமைக்க பயிற்சி மற்றும் உதவியளித்தல்.

(ஊ) வெண்பட்டு உற்பத்தி செய்யும் தானியங்கி மற்றும் பலமுனை நூற்பாளர்களுக்கு ஊக்கத் தொகையை அதிகரித்து வழங்குதல்.

(எ) பட்டு நூற்புத் தொழில் முனைவோர் மற்றும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

(ஏ) மூடப்பட்டுள்ள அரசு, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் பிரிவில் உள்ள பட்டுநூற்பு அலகுகளை மீண்டும் புதுப்பித்தல்.

(ஐ) தனியார் மற்றும் அரசு பட்டு நூற்பு அலகுகளில், பட்டு நூற்பிற்கு பயன்படுத்தப்படும் பழமையான காட்டேஜ் பேசின் இயந்திரங்களுக்குப் பதிலாக மேம்படுத்தப்பட்ட பலமுனை பட்டு நூற்பு இயந்திரங்களை நிறுவுதல்.



## 15. 2014–2015ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டு வளர்ச்சித் துறைக்கென 2014–2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளைச் செயல்படுத்த பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | | 2014–2015க்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | **திட்டப் பணிகள்** | | |
| அ | பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் | **100.00** | |
| | பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (கணக்குகள் இடையே மாற்றம்) | 160.88 | |
| | | **260.88** | 260.88 |
| ஆ | **புதிய திட்டங்கள்** | | 1,319.96 |
| இ | **மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்** | | 0.01 |
| ஈ | **மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம்** | | 0.01 |
| | திட்டப் பணிகள் மொத்தம் | | **1,580.86** |
| 2 | **திட்டம் சாராப் பணிகள்** (அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் முதலியன). | | 5,080.06 |
| | **மொத்தம்** (திட்டப் பணிகள் + திட்டம் சாராப் பணிகள்) | | **6,660.92** |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

***"பூம்புகார்"*** என அனைவராலும் அறியப்பட்ட **தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்** பொதுத் துறை நிறுவனமாக **26.07.1973** முதல் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாட்டு கைவினைஞர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு **01.08.1973** முதல் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:-**

- தமிழக கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்
- கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்
- கைவினைஞர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்
- கைவினை பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல்
- கைத்திறப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் கடினத்தன்மையை களைதல்
- கைத்திறத் தொழிலில் உள்ள பணியாளர்களுக்கு பணியின் போது ஏற்படும் இடர்பாடுகளை குறைத்தல் / நீக்கல்
- வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்
- கைத்தொழிலுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல்



## 2. விற்பனை


பூம்புகார் நிறுவனம், தனது 14 விற்பனை நிலையங்கள் (தமிழ்நாட்டில் 11 மற்றும் வெளி மாநிலங்களில் மூன்று – பெங்களூரு, கொல்கத்தா மற்றும் புதுதில்லி) மூலமாக கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதன் வாயிலாக, கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது. மேலும், வருடம் முழுவதும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைவினைப் பொருட்களின் கண்காட்சிகளை நடத்தி வருவதோடு வெளிநாடுகளிலும் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

### 2.1 விற்பனை அளவு

இந்நிறுவனம் நிறுவப்பட்டபோது, ஆண்டு விற்பனை ரூ.50.00 இலட்சமாக மட்டுமே இருந்தது. கடந்த 41 ஆண்டுகளில் இந்நிறுவனம் மாபெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் ரூ.30.87 கோடி விற்பனையை எய்தியது. **இந்த விற்பனை அளவானது பூம்புகாரின் உயர்ந்தபட்ச சாதனையாகும்.**

தமிழ்நாட்டின் முக்கிய விற்பனை கைவினைப் பொருட்களான பஞ்சலோக சிலைகள், பித்தளை விளக்குகள், தஞ்சாவூர் ஓவியங்கள், மரச்சிற்பங்கள் மற்றும் கற்சிற்பங்கள் ஆகியவை பூம்புகாரின் ஆண்டு விற்பனையில் இன்றியமையாத பங்கு வகிக்கிறது.


## 2.2 2013–14 ஆம் ஆண்டுக்குரிய கைத்திற பொருட்கள் வகைவாரியாக விற்பனை






## 2.3 கடந்த ஐந்து ஆண்டுகளின் விற்பனை

இந்நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் விற்பனை விபரங்கள் பின்வருமாறு :–



## 3. கண்காட்சிகள்

பூம்புகார் நிறுவனம் கைவினைஞர்களுக்கு கூடுதல் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்காக ஆண்டு முழுவதும் விற்பனை கண்காட்சிகளை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நடத்தி வருகிறது. **2012–2013** ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட **226** கண்காட்சிகளை ஒப்பிடும்போது, **2013–2014**இல் நடத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை **255** ஆக உயர்ந்துள்ளது.

**ஒரு வருடத்தில் பூம்புகாரால் நடத்தப்பட்ட கண்காட்சிகளில் இதுவே உயர்ந்தபட்சமாகும்.**


255 கண்காட்சிகளில், **42** கண்காட்சிகள் வெளிமாநிலங்களில் நடத்தப்பட்டுள்ளது. **2013–2014** ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இக்கண்காட்சிகளில் செய்யப்பட்ட மொத்த விற்பனை ரூ.**1223.00** இலட்சமாகும்.

பூம்புகார் நிறுவனம், புதுதில்லி, மும்பை, கொல்கத்தா, அகமதாபாத், சூரத், வடோதரா, லக்னோ, கொச்சி, சண்டிகார், போபால் மற்றும் இந்தூர் ஆகிய இடங்களில் பண்டிகை காலங்களான விநாயகர் சதுர்த்தி, துர்கா பூஜா, தீபாவளி மற்றும் தசரா நாட்களில் கண்காட்சிகளை நடத்திவருகிறது.





**பஞ்சலோக சிவகாமி**




## 4. வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் தமிழ்நாடு கைவினைப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளித்தல்

வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளில் நடத்தப்படும் கண்காட்சிகளில் அதிகமான தமிழக கைவினைஞர்கள் பங்கேற்று தங்களின் படைப்புகளை சந்தைப்படுத்த விரும்பினாலும் அதற்குண்டான செலவினங்களை மேற்கொள்ள இயலாத காரணத்தால் சந்தைப்படுத்த இயலவில்லை. எனவே



கைவினைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. கண்காட்சியில் பங்கேற்பது தொடர்பாக ஏற்படும் பயண செலவு, தங்குமிடம் மற்றும் பல்வேறு செலவினங்களை ஈடு செய்யும் வண்ணம் இந்நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் வெளி மாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் பங்குப்பெறும் ஒவ்வொரு கைவினைஞருக்கும் ரூ.25,000/– வரை உதவித் தொகையும், வெளிநாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளில் கலந்துக் கொள்ளும் கைவினைஞருக்கும் ரூ.50,000/– வரை உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. 2013–2014ஆம் ஆண்டில் இதற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.50.00 இலட்சமாகும்.

## 5. ஏற்றுமதி

இந்நிறுவனம், சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோகச் சிலைகள், பித்தளை அலங்கார விளக்குகள், நூக்கமர அறைகலன்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய கைவினைப்பொருட்களில் சிலவாகும்.

## 6. விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பின்வரும் 14 விற்பனை நிலையங்களை கொண்டுள்ளது

1. சென்னை, 2. புதுதில்லி, 3. பெங்களூரு, 4. கொல்கத்தா, 5.கோயம்புத்தூர், 6.ஈரோடு, 7.சேலம், 8. தஞ்சாவூர், 9. திருச்சிராப்பள்ளி, 10. மதுரை, 11. கன்னியாகுமரி, 12. கும்பகோணம், 13. சுவாமிமலை , மற்றும் 14. மாமல்லபுரம்


## 7. உற்பத்தி

இந்நிறுவனம் பஞ்சலோக சிலைகள், பித்தளை விளக்குகள், தஞ்சாவூர் கலைத்தட்டுகள், கற்சிற்பங்கள், மரசிற்பங்கள் போன்ற கைவினைப் பொருட்களை தயாரிக்கும் உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது. இந்நிலையங்களின் மூலமாக பயிற்சி திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2013-2014ஆம் ஆண்டில் இந்நிறுவனம் சாதனை உற்பத்தியாக ரூ.500.10 இலட்சத்தை ஈட்டியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளின் உற்பத்தி விவரம் பின்வருமாறு:-






## 7.1 உற்பத்தி நிலையங்கள்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் 7 உற்பத்தி நிலையங்கள் கீழ்காணும் இடங்களில் உள்ளன 1.நாச்சியார்கோயில் (பாரம்பரிய பித்தளை விளக்குகள்), 2. மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப் பொருட்கள்), 3. வாகைகுளம் (பித்தளை மலபார் விளக்குகள் மற்றும் பிற விளக்குகள்), 4. சுவாமிமலை (பஞ்சலோக சிற்பங்கள்), 5. தஞ்சாவூர் (தஞ்சாவூர் கலைத் தட்டுகள்), 6. கள்ளக்குறிச்சி (சந்தன மரசிற்பங்கள்), மற்றும் 7. மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்).

இந்தியாவிலுள்ள அனைத்து மாநில அரசு கைவினைப் பொருட்கள் வளர்ச்சி கழகங்களில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மட்டுமே தமிழகத்தின் முக்கிய

கைவினைப் பொருட்களுக்கு சொந்த உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ள ஒரே கைத்திறத் தொழில் நிறுவனமாகும்.

## 7.2 சிறப்புத் திட்டங்கள்

தமிழக அரசின் விலையில்லா திட்டத்தின் கீழ், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினருக்கு 2013–2014ஆம் ஆண்டில், ரூ.98.00 இலட்சம் மதிப்பிலான 2432 பித்தளை சலவைப் பெட்டிகளை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் உற்பத்தி செய்து வழங்கும் பணியினை மேற்கொண்டது.

## 8. நிதிநிலை செயல்பாடுகள்

இந்நிறுவனம் முந்தைய ஆண்டில் ஈட்டிய நிகர இலாபம் ரூ.82.82 இலட்சத்தை காட்டிலும், 2013–2014ஆம் ஆண்டில் ரூ.84.02 இலட்சம் (தணிக்கை செய்யப்படாதது) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளின் விற்பனை, உற்பத்தி மற்றும் நிகர இலாபம் விவரம் பின்வருமாறு:-

| வருடம் | விற்பனை | உற்பத்தி | நிகர இலாபம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2009-2010 | 2227.81 | 333.11 | 25.22 |
| 2010-2011 | 2552.90 | 340.39 | 37.37 |
| 2011-2012 | 2746.20 | 458.48 | 49.88 |
| 2012-2013 | 3064.49 | 462.63 | 82.82 |
| 2013-2014 | 3087.00 | 500.10 | 84.02 (தணிக்கை செய்யப்படாதது) |



## 9. மனித வள மேம்பாட்டினை வலுபடுத்துதல்

நிறுவனத்தின் மனித வளத்தினை வலுப்படுத்தும் விதமாக 59 பணியாளர்களை இந்நிறுவனம் வெவ்வேறு பணி நிலைகளில் பணியமர்த்தியுள்ளது. உரிய காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையால் விற்பனை, உற்பத்தி மற்றும் நிர்வாகம் போன்ற அனைத்திலும் இந்நிறுவனம் தற்பொழுது வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

## 10. கைவினைஞர்களுக்கான நலதிட்டங்கள்

### 10.1 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்

- இந்நிறுவனம் தன்னுடைய உற்பத்தி நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை அளிக்கிறது.
- மேலும், இந்நிறுவனத்தின் சிறப்பு திட்டங்கள் வாயிலாகவும் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

### 10.2 பூம்புகார் கைவினைஞர்களின் ஊதியத்தை எண்ணிக்கை அடிப்படையில் உயர்த்துதல்

2011–2012ஆம் ஆண்டில், இந்நிறுவனம் தனது உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் கைவினைஞர்களுக்கு 100 விழுக்காடுகள் கூலியை உயர்த்தியுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு முழு நேரம் வேலை பார்க்கும் கைவினைஞரின்

மாதாந்திர வருவாய் ரூ.15,000/– முதல் ரூ.20,000/– வரை உயர்ந்துள்ளது.

மேலும் இந்நிறுவனத்தின் உற்பத்தி நிலையங்களில் பணியாற்றும் கைவினைஞர்களுக்கு 50 சதவிகித கூலி உயர்வு 01.10.2013 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் நடவடிக்கையால் தனியார் துறையில் உள்ள கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கூலியும் தற்போது கணிசமாக உயந்துள்ளது. இதன் மூலம் இந்நிறுவனம் தமிழக கைவினைஞர்களின் நலனை மேம்படுத்த மறைமுக வசதி செய்துள்ளது.

இதன் மூலம் உற்பத்தி மற்றும் இலாபம் அதிகரித்துள்ளது.

## 11. பயிற்சி திட்டங்களின் மூலம் புதிய தலைமுறை கைவினைஞர்களை உருவாக்குதல்

தமிழ்நாட்டின் கைத்திறத் தொழில்களில் புதிய தலைமுறை கைவினைஞர்களை உருவாக்கும் நோக்கத்துடன் இந்நிறுவனம் தொடர்ந்து பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. 2012–2013ஆம் ஆண்டில் கீழ்க்கண்டுள்ள மூன்று பயிற்சி திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு ரூ.20.00 இலட்சம் நிதியுதவியாக வழங்கியுள்ளது.



**11.1** பூம்புகார் உலோக சிற்ப நிலையம், சுவாமிமலையில் மூன்று வருட கால பஞ்சலோக சிலைகள் பயிற்சி வகுப்பு

**11.2** பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம், நாச்சியார்கோயிலில் இரண்டு வருட கால பித்தளை விளக்குகள் தயாரிப்பு பயிற்சி வகுப்பு

**11.3** பூம்புகார் கலைத்தட்டு உற்பத்தி நிலையம், தஞ்சாவூரில் முற்றிலும் பெண்களுக்கென ஓராண்டு கால தஞ்சாவூர் கலைத்தட்டு பயிற்சி வகுப்பு.

2013–2014ஆம் ஆண்டில் மேலும் கீழ்காணும் :மூன்று பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**11.4** கைத்திறத் தொழிலில் 6 கைவினைஞர்களுக்கு, பாரம்பரிய பஞ்சலோக சிலைகள் உற்பத்தி மையமான சுவாமிமலையில் மூன்றாண்டு பயிற்சி குருகுலம் முறையில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுவருகிறது. இதற்கான நிதியுதவி தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்டது.

**11.5** தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைகளில் தஞ்சாவூர் ஓவிய கலை தனித்துவமிக்க ஒன்றாகும். இருப்பினும் புதிய கைவினைஞர்கள் ஈடுபடாததால் இக்கலை மெல்ல நசிந்து வந்தது. 1980–81ஆம் ஆண்டில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் இக்கலைக்கு சிறிதளவு புத்துயிர் ஊட்டப்பட்டது.

இக்கலையினை மேலும் வளர்ச்சியடைய செய்திடும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 100 மகளிருக்கான ஓராண்டு கால தஞ்சாவூர் ஓவிய பயிற்சி வகுப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள கோயில்களின் தெய்வத் திருவுருவங்களைப் போன்று உருவாக்குவதை மையப்படுத்திய பயிற்சி திட்டமாகும்.

பயிற்சியின்போது, பயிற்சியாளர்களுக்கு மூலப் பொருட்கள், மற்றும் மாத உதவித் தொகை ரூ.2000/–மும் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சியின் முடிவில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு உரிய சான்றிதழும் வழங்கப்படும்.

இதற்கான நிதியுதவியாக தமிழக அரசினால் ரூ.83.00 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இப்பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

**11.6** தமிழகத்தின் பாரம்பரியமிக்க மரச் சிற்பங்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரிய அளவில் தேவைப்பாடு உள்ளது. இக்கைத்திறத் தொழிலானது கள்ளக்குறிச்சி, தம்மம்பட்டி, அரும்பாவூர் மற்றும் சின்னசேலம் ஆகிய ஊர்களில் செயல்பட்டு வருகின்றது.





**ஸ்ரீரங்கத்தில் 100 மகளிருக்கான ஓராண்டு கால தஞ்சாவூர் ஓவிய பயிற்சி**



**இளம் கைவினைஞர்களுக்கு**
**அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டி**

காலப்போக்கில் இக்கைத்திறத் தொழிலில் ஈடுபட்டுவரும் கைவினைஞர்களின் எண்ணிக்கை மெல்ல குறைந்து கொண்டே வருகிறது. இளம் கைவினைஞர்களுக்கு இக்கைத்திறத் தொழிலில் பயிற்சி அளிப்பதன் மூலம் இக்கைத்திறத் தொழில் நிச்சயம் நன்கு செழித்தோங்குவதுடன், சந்தைக்கு தேவைப்படும் நல்ல மரச்சிற்பங்களின் உற்பத்தியையும் ஈடு செய்ய இயலும். எனவே இக்கைத்திறத் தொழிலில் ஆர்வமுள்ள 10 இளம் கைவினைஞர்களுக்கு ரூ.6.00 இலட்சம் செலவில் ஒரு வருட பயிற்சி வகுப்பு துவக்க தீர்மானிக்கப்பட்டது. இப்பயிற்சி வகுப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## 12. கைவினைஞர்களுக்கான விருதுகள்

### 12.1 பூம்புகார் மாநில விருதுகள்

தமிழகத்தில் கைத்திறன் மேம்பாட்டுக்காக செயல்பட்ட சிறந்த 10 கைவினைஞர்களை தேர்ந்தெடுத்து இந்நிறுவனம் வருடந்தோறும் ரூ.50,000/– ரொக்க பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிர பத்திரம் மற்றும் தகுதிச் சான்றிதழ் கொண்ட பூம்புகார் மாநில விருது வழங்கி வருகிறது. இவ்விருது பெற்ற கைவினைஞர் பொருளாதாரத்தில் பின்தங்கியவராக இருந்தால் இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதிய திட்டத்திலும் பயன் பெற தகுதி உடையவராவர்.



### 12.2 பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதுகள்

2011–2012ஆம் ஆண்டு முதல் *“பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது”* என்ற புதிய விருது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விருது ரொக்கப்பரிசு ரூ.5000/–, ஒரு வெள்ளி பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும். ஒவ்வொரு ஆண்டும் 16 கைத்திறத் தொழிற் பிரிவிலிருந்து 85 கைவினைஞர்களுக்கு விருது வழங்கப்படுகிறது. பெண் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு கைவினை தொழிற்பிரிவிலும் ஒரு பெண் கைவினைஞர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். 2011–2012ஆம் ஆண்டில் 60 கைவினைஞர்களுக்கும் 2012–2013ஆம் ஆண்டில் 63 கைவினைஞர்களுக்கும், 2013–14ஆம் ஆண்டில் 76 கைவினைஞர்களுக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

### 12.3 வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகள்

65 வயதுக்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்கு, ‘வாழும் கைவினைப் பொக்கிஷம்’ என்ற விருது 2013–2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமது வாழ்நாளை அக்கலையை வாழ்விக்கவும் அதன் மேம்பாட்டிற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட 10 கைவினைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படும்.

இவ்விருது தலா ரூ.1.00 லட்சம் ரொக்கப்பரிசும், தாமிர பத்திரமும், 8 கிராம் எடையிலான தங்க பதக்கமும், மற்றும் சான்றிதழும் கொண்டதாகும்.

2013–2014ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, இவ்விருது தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் மூலம் 10 கைவினைஞர்களுக்கு ஆண்டுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது.

## 12.4 அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான விருதுகள்

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க கைத்திறத் தொழில்கள் நீடித்திருக்கவும் அவற்றை அடுத்த தலை முறையினருக்கு கொண்டு செல்வதற்கும் இளைஞர்களை இத்துறையில் ஊக்கப்படுத்துதல் அவசியமாகிறது. இதை நடைமுறைப் படுத்துவதற்காக 2013–2014ஆம் ஆண்டு முதல் இளம் கைவினைஞர்களுக்கு அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டி 30 வயதிற்குட்பட்ட கைவினைஞர்களுக்காக அறிமுகப்படுத்தப் பட்டது. இப்போட்டியில் சுமார் 65 கைவினைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வெள்ளி பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படும். இப்போட்டிகள் இளம் கைவினைஞர்கள் எளிதில் பங்கு பெறும் வகையில், பாரம்பரிய



கைவினை பொருட்கள் மையங்களான சென்னை, தஞ்சாவூர், நாச்சியார்கோயில், சுவாமிமலை, மதுரை, கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி, அரும்பாவூர், வாகைகுளம், புதுக்கோட்டை, மாமல்லபுரம், திண்டுக்கல் மற்றும் பத்தமடை ஆகிய 13 மையங்களில் நடத்தப்பட்டது.

2013–2014ஆம் ஆண்டில் பல்வேறு தொழில்களில் 66 இளம் கைவினைஞர்களுக்கு முதல் பரிசும், மேலும் 66 இளம் கைவினைஞர்களுக்கு இரண்டாம் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பூம்புகார் மாநில விருதினை 06.11.2013 அன்று கைவினைஞருக்கு வழங்கினார்கள்**

## 13. நடைமுறையில் உள்ள பிற திட்டங்கள்

### 13.1 சென்னையில் கைத்திறன் அருங்காட்சியகம்

சென்னை, அண்ணா சாலையில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் ரூ.50.00 இலட்சம் செலவில் ஒரு கைத்திறன் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

### 13.2 கன்னியாகுமரியில் நிரந்தர கண்காட்சி திடல்

இந்நிறுவனம் மேலும், கன்னியாகுமரியில் ரூ.2.00 கோடி செலவு மதிப்பீட்டில் ஒரு நிரந்தர கண்காட்சி திடலை அமைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.



# தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

**“கதர் உணர்வு நமக்குள் இருக்குமேயானால் நம் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எளிமை நம்மை சூழ்ந்திருக்கும். கதர் உணர்வு என்பது எல்லையற்ற பொறுமையாகும். கதர் உற்பத்தியை பற்றி அறிந்தவர்கள், நூற்போர் மற்றும் நெய்வோர்கள் எப்படி பொறுமையுடன் அவர்களுடைய தொழிலில் பாடுபடுகிறார்கள் என்பதை அறிவார்கள் மற்றும் சுயராஜ்ஜியம் என்ற நூலினை நூற்கும்போது அந்த அளவிற்கு நாம் பொறுமையுடன் இருந்ததை அறிகிறோம்.**

**கதர் உணர்வு என்பது பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உள்ள தோழமை உணர்வாகும். இதன் அர்த்தம் யாதெனில் நம்முடன் இருக்கும் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஒவ்வொன்றையும் முழுமையாக துறப்பது மற்றும் பல இலட்சக்கணக்கான நம் நாட்டின் மக்களிடையே அந்த உணர்வினை பண்படுத்தினால் நமது இந்திய நாடு என்னவாய் இருக்கும்! நான், நாட்டில் பயணிக்கும் அதிக அளவு இடங்களிலும், நான், எனக்காக பார்க்கும் அதிக அளவு பொருள்களிலும், நூற்கும் சக்கரத்தின் செயல்திறன் மீது எனது நம்பிக்கை பலமாக வளர்கிறது.**

**– மகாத்மா காந்தியடிகள்**

இரட்டைகள் மூலம் நூல் நூற்றலை பிரச்சாரப்படுத்தும்போது, இது ஏழை மக்களுக்கு கூடுதல் வருமானம் அல்லது தங்களது ஆடைகளை தாங்களே உற்பத்தி செய்வதால் பணத்தையும் சேமிக்க இயலும் என அண்ணல் காந்தியடிகள் நம்பினார். அவரைப் பொறுத்தவரை தன்நிறைவு சிந்தனைக்கு இது ஒரு சுருக்கமாகும். அவர் நூல் நூற்றலை **1919**–ல் பிரச்சாரப்படுத்தி தொடங்கியபோது தன்னை பின்பற்றுபவர்களில் ஒருவர் ஒரு சிறந்த சக்கரத்தின் வடிவமைப்புக்காக ரூ.5000 பரிசு வழங்க அறிவுறுத்தினார். ஓர் எளிய மற்றும் எளிதில் கையாளக்கூடிய சக்கரம் அடுத்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டது. அண்ணல் காந்தியடிகளின் ஆர்வலர்களால் வழங்கப்பட்ட பொருளுதவியுடன் சக்கரங்கள் தயாரிக்கப்பட்டு ஏழை எளியோருக்கு விநியோகம் செய்யப்பட்டது. கதர் துணி உற்பத்தி செய்திட கையினால் உற்பத்தி செய்திடும் நெசவாளர்களுக்கு நூல் வழங்கப்பட்டது. இந்தியர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கதர் மற்றும் இதர பொருட்களையும் தேசீய இலக்கியத்தையும் சந்தைப்படுத்த கதர் விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டது.

அண்ணல் காந்தியடிகளின் கோட்பாட்டினை கருத்திற் கொண்டு கிராமப்புறங்களில் கதர் நூற்பு தொழில் உட்பட மிகுந்த வேலைவாய்ப்பினை ஏற்படுத்திட தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரிய சட்டம் **1959**–இன்படி ஏப்ரல் **1960**–ல்



தமிழ் நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒரு சட்ட ரீதியான அமைப்பாக **1960**–ல் துவக்கப்பட்டதிலிருந்தே இவ்வாரியம் கிராமத்தொழில்களின் வளர்ச்சியை பெருக்குவதில் பெருமை தக்க வகையில் சேவை செய்து வருகிறது.

## வாரியத்தின் நோக்கங்கள்

- வேலைவாய்ப்பு வழங்கும் சமூக நோக்கங்கள்
- விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் பொருளாதார நோக்கங்கள்
- மக்களிடையே தன்நிறைவு நிலையினை உருவாக்குதல் மற்றும் ஒரு வலுவான கிராம உணர்வினை ஏற்படுத்துதல்.

## நிர்வாகம்

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் அரசினால் நியமனம் செய்யப்படும் அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு சட்ட ரீதியான அமைப்பாக இயங்கி வருகிறது. முக்கிய கொள்கை முடிவுகளை மேற்கொள்ள வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அன்றாட நடவடிக்கைகள் தலைமைச் செயல் அலுவலர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாரியத்தின் செயல்பாடுகள் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் என இரு பெரும் பிரிவுகளின் கீழ் வருகிறது.

### 1. கதர்

இந்திய சுதந்திர போராட்டத்தில் “கதர்” முக்கிய பங்கு வகித்தது. கதர் இந்திய மக்களிடையே தேச பக்தி, அமைதி மற்றும் எளிமை போன்ற உணர்வுகளை ஏற்படுத்தியும், இந்திய சுதந்திர இயக்க போராட்டத்திலும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்கியது. இந்திய கலாச்சாரம், வாழ்வின் வழிமுறை மற்றும் கிராமங்களின் பொருளாதார வளர்ச்சி ஆகியவைகளை கதர் தாங்கி நிற்பதோடு ஆங்கிலேய அரசுக்கு பொருளாதார தடையையும் ஏற்படுத்தியது. இராட்டைகள் மூலம் பஞ்சிலிருந்து கையினால் நூற்கப்படும் நூலைக் கொண்டு கதர் துணி நெய்யப்படுகிறது. கதர் துணி இந்திய நாட்டின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப இயற்கையானது மற்றும் திடமானது. கதர் ஆடை உடலுக்கு இதமளிப்பதுடன் ஒவ்வாமை அல்லது எரிச்சல் போன்ற விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. மேலும் அது மனித நேய உணர்வினை வழங்குகிறது.





கிராமிய நூற்பு நிலையம், கீழப்பாவூர், திருநெல்வேலி மாவட்டம்

## 1.1 கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்றான பருத்தி மற்றும் பாலியஸ்டர் நூல் மற்றும் கதர் துணி உற்பத்தியானது, கிராம கைவினைஞர்களுக்கு நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நூல் நூற்கும் பணி மற்றும் நெசவுப்பணிகளை பெரும்பாலும் பெண்களே மேற்கொள்கின்றனர். தமிழ்நாட்டில் உள்ள 107 கிராமிய நூற்பு நிலையங்கள், 41 கதர் உற்பத்தி உபகிளைகள் மற்றும் 9 நேபாளி தறி அலகுகள் மூலம் வேட்டிகள், புடவைகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் சீருடை துணிகள் போன்ற கதர் ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த கதர் உற்பத்தி மையங்கள் பெரும்பாலும் கிராமப்புற பெண்களை உள்ளடக்கிய சுமார் 20,000 கைவினைஞர்களுக்கு தங்கள் வாழ்வாதாரத்திற்கான வருவாயை ஈட்டிட வகை செய்கிறது. மேலும் கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவினால் 68 சான்றளிக்கப்பட்ட சர்வோதய சங்கங்களும் கதர் உற்பத்தி மற்றும் விற்பனை செய்து வருகின்றன.





நேபாளி தறி நிலையம், கருங்குளம், திருச்சி மாவட்டம்

2013–2014–ஆம் ஆண்டில் ரூ.6.74 கோடி மதிப்புள்ள கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா ரகங்கள் வாரியத்தால் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.11.18 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 1.2 கதர் பட்டு

பாரம்பரியமிக்க கதர் பட்டுப் புடவைகள் 18 கதர் பட்டு உற்பத்தி அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. எக்காலத்திலும் பாரம்பரியமிக்க இப்பட்டு புடவைகள் கலைநயமிக்க சரிகை வேலைப்பாடுகளுடன் நெய்யப்பட்டு நியாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் நுகர்வோர் ரசனைக்கேற்ப அச்சிட்ட மற்றும் எம்பிராய்டரி வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டுப்புடவைகளும் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றன. தரம் மற்றும் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் பட்டு புடவைகளுக்கு மத்திய பட்டு வாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கு அடையாளமாக வழங்கப்படும் “சில்க் மார்க்” லேபிள் வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் பட்டு புடவைகளின் தரத்தினை அங்கீகரிப்பதாக உள்ளது. கதர் பட்டு உற்பத்தி அலகுகளின் செயல்பாடுகளால்





பட்டு லடி கும்பகோணம்

1500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

2013–2014–ஆம் ஆண்டில் ரூ.5.08 கோடி மதிப்பிற்கு கதர் பட்டு ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.7.00 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 2. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலத் திட்டங்கள்

### 2.1 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி வாரியத்தால் உருவாக்கப்பட்டது. நெசவாளர்கள் அவர்களது கூலியிலிருந்து 12 விழுக்காட்டை இந்த நல நிதிக்கு வழங்குவதுடன் வாரியமும் அதற்கு ஈடான பங்குத் தொகையை நல நிதியாக பங்களிக்கிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகை காலங்கள் போன்றவற்றிற்கு இந்நிதியிலிருந்து அவர்களுடைய கோரிக்கையின் பேரில் அவர்களது கணக்கில் உள்ள தொகைக்கு ஏற்ப நிதியுதவி வழங்கப்படுகிறது. ஓய்வு பெறும்பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத்தொகையும் திருப்பியளிக்கப்படுகிறது. மேலும் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலியுடன் 10 விழுக்காடு கூலித் தொகையினை ஊக்குவிப்பு தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.



### 2.2 கதர் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல வாரியம்

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக நல வாரியம் அமைக்கப்பட்டு கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென இவ்வாரியத்திற்கு ரூபாய் ஒரு கோடி அரசால் மாQயமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நல உதவித் தொகைகள் பின்வருமாறு:–

| வ. எண் | உதவிகளின் தன்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ்<br>அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவி தொகை<br>ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைகேற்ப | 1,00,000/–<br>10,000/– முதல் 1,00,000/– வரை |
| 2 | இயற்கை மரணம் எய்தியவருக்கான உதவித் தொகை | 15,000/– |
| 3 | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | 2,000/– |
| 4 | கல்வி உதவித் தொகை | |

| | | |
|---|---|---|
| | அ) 10–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | ஆ) 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/– |
| | இ) 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | ஈ) 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/– |
| | உ) 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/– |
| | ஊ) முறையான பட்டப் படிப்புக்கு | 1,500/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | 1,750/– |
| | எ) முறையான பட்ட மேற்படிப்புக்கு | 2,000/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டமேற்படிப்புக்கு | 3,000/– |
| | ஏ) தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு | 2,000/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்டப்படிப்புக்கு | 4,000/– |
| | ஐ)தொழிற் கல்வி பட்ட மேற்படிப்புக்கு | 4,000/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்டமேற் படிப்புக்கு | 6,000/– |
| | ஒ) ஐ.டி.ஐ. அல்லது தொழிற் பயிற்சி படிப்புக்கு | 1,000/– |
| | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது தொழிற் பயிற்சி படிப்புக்கு | 1,200/– |
| 5. | திருமண உதவி தொகை | 2,000/– |
| 6. | மகப்பேறு உதவித் தொகை | |



| | | |
|---|---|---|
| | அ) மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் | 6,000/– |
| | ஆ) கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/. |
| 7. | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500/– வரை |
| 8. | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1000/– |

இதுவரை 9042 நபர்கள் நூற்போர் மற்றும் நெசவாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு இந்நலவாரியத்தின் மூலம் 275 பயனாளிகளுக்கு ரூ.17.81 இலட்சம் மதிப்பில் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 3. கிராமத்தொழில்கள்

கிராமப்புறத்தில் வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், கிராமப்புற கைவினைஞர்களின் வருமானத்தை உயர்த்துவதிலும் கிராமத்தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தச்சு மற்றும் கருமாரத்தொழில், தோல் பொருட்கள், சோப்பு உற்பத்தி, கைமுறைகாகிதம், மண்பாண்டம், தேனீவளர்ப்பு ஆகிய பல்வேறு தொழில்களுக்கு வாரியம் ஊக்கமளித்து வருகிறது.

மாநிலம் முழுவதும் உள்ள சில்லறை விற்பனை நிலையங்கள், அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பொது விநியோக திட்டத்தின் மூலம் இப்பொருட்களின் விற்பனையினை ஊக்குவித்து அபிவிருத்தி செய்திட வாரியம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



ஜவ்வாது அலகு, வேடப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்



## 3.1 தச்சு மற்றும் கருமாரத்தொழில்கள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் தச்சு, கருமார தொழில் ஊரக கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு முக்கியமான தொழிலாகும். வாரியக் கட்டுப்பாட்டின் கீழ் வீரராகவபுரம், பள்ளிகொண்டா, அரக்கோணம், பேட்டை, திருப்பூர், நாஞ்சிக்கோட்டை மற்றும் நாகமலைபுதுக்கோட்டை ஆகிய ஏழு இடங்களில் தச்சுக் கொல்லு அலகுகள் இயங்கி வருகின்றன.

அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு தேவைப்படும் அறைகலன்கள் இவ்வலகுகளின் மூலம் வழங்கப்படுகின்றன. 2013–2014ஆம் ஆண்டில் ரூ.6.04 கோடி மதிப்பிற்கு தச்சு கொல்லு மற்றும் கருமாரத்தொழில் அலகு மூலம் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.6.57 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இனிவருங்காலங்களில் இளம் தலைமுறையினரையும் இத்தொழிலில் ஈடுபடுத்திடும் பொருட்டு அரசின் நிதியுதவியுடன் முதற்கட்டமாக 75 நபர்களுக்கு அரக்கோணம் மற்றும் பள்ளிகொண்டா அலகுகள் மூலம் தச்சு கொல்லு தொழில்களுக்கான பயிற்சி துவங்கப்பட்டுள்ளது.



தச்சு மற்றும் கருமார அலகு, பள்ளிகொண்டா,வேலூர் மாவட்டம்



## 3.2 தோல் தொழில்

கிராமத்தொழில்களில் தோல் தொழில் ஒரு முக்கியமான தொழிலாக வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தின் நேரடி கட்டுப்பாட்டில் 13 காலணி உற்பத்திக் கூடங்கள் இயங்கி வருகின்றன. காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சென்னை துறைமுக பொறுப்புக் கழகம், போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் சமூக நலத்துறை ஆகியன தங்களுக்கு தேவையான காலணிகள் மற்றும் தோல் பொருட்களுக்கான தேவைப்பட்டியலை வாரியத்திற்கு வழங்குகிறது. காலணிகள், பெல்ட், துப்பாக்கி உறை, நடத்துனர் பைகள், மற்றும் கோப்புப் பெட்டி போன்ற சில முக்கிய பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு இந்த நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் கதரங்காடிக்கு வருகை புரியும் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப நல்ல தரமான மற்றும் வாங்கக்கூடிய விலையில் அனைத்து தரப்பினருக்கும் ஏற்றவாறு நவீன வடிவங்களில் காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தோல் பொருட்களின் உற்பத்தியில் சுமார் 500 கைவினைஞர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ளனர்.



காலணி அலகு, சேந்தமங்கலம், நாமக்கல்



2013–2014–ஆம் ஆண்டில் ரூ.4.51 கோடி அளவிற்கு தோல் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.3.30 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 3.3 கைமுறை காகித தொழில்

வாரியமானது தமது கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பிடாகம், செண்பகப்புதூர், கோவனூர் மற்றும் உதகை ஆகிய நான்கு கைமுறை காகித அலகுகளின் மூலம் கச்சா அட்டை, கோப்பு அட்டை, மெல்லிய தாள், பத்திரத்தாள், கோப்பு மேலுறைகள் மற்றும் அட்டைப்பெட்டிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகிறது.

கைமுறை காகித தொழிலின் மூலம் 183 தொழிலாளர்களுக்கு வாரியமானது வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது. 2013–2014–ஆம் ஆண்டில் கைமுறை காகித உற்பத்தி ரூ.75.57 இலட்சம் மற்றும் விற்பனை ரூ.73.89 இலட்சமாகவும் எய்தப்பட்டுள்ளது.

கோவனூர் கைமுறை காகித உற்பத்தி அலகில், துணியுடன் கூடிய காகித உறை தயாரிக்கும் இயந்திரத்தை ரூ.26.00 இலட்சம் செலவில் வாரியம் நிறுவியுள்ளது. மேலும் 2013–2014–ம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ் பிடாகம் கைமுறை காகித அலகின் உற்பத்தித்திறனை அதிகாரிக்கும்

பொருட்டு வாரியம் ரூ.4.00 இலட்சம் செலவில் தற்போதுள்ள கூழாக்கும் இயந்திரத்தின் பழுதடைந்த உதிரி பாகங்களை மாற்றியமைத்து அலகினை புதுப்பித்துள்ளது.

## 3.4 சோப்புத் தொழில்

வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 17 சோப்பு அலகுகளில், 7 குளியல் சோப்பு உற்பத்தி அலகுகளும், 7 டிடர்ஜெண்ட் சோப்பு உற்பத்தி அலகுகளும் மற்றும் 3 சலவை சோப்பு உற்பத்தி அலகுகளும் ஆகும்.

வாரியமானது குமரி, மூலிகா மற்றும் கோபுரம் சந்தனம் ஆகிய சோப்பு வகைகளை சமீபத்தில் புதிதாக அறிமுகம் செய்துள்ளது. மேலும் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் உள்ள மக்களை கவரும் வண்ணம் குறைந்த விலையில் புதிய குளியல் சோப்பு வகைகளை வாரியம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

2013–2014–ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ் ரூ.11.00 இலட்சம் செலவில் வாரியம் 3 புதிய டிடர்ஜெண்ட் சோப்பு உற்பத்தி செய்யும் இயந்திரங்களை பண்ருட்டி, பெருமாள்மலை மற்றும் செவ்வாப்பேட்டை ஆகிய அலகுகளில் நிறுவியுள்ளது.

சோப்புத் தொழிலில் 51 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வாரியம் வழங்கி வருகிறது. 2013–2014–ஆம் ஆண்டில் சோப்பு உற்பத்தி ரூ.8.18 கோடி அளவிலும் விற்பனை ரூ.7.30 கோடி அளவிலும் எய்தப்பட்டுள்ளது.





சோப்பு அலகு, திண்டுக்கல்

## 3.5 தேனீ வளர்ப்புத்தொழில்

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உள்ள காடுகளில் தேனீ வளர்ப்புத் தொழில் பெருமளவில் மேற்கொள்ளப்படுகிறது. இரப்பர் தோட்டங்களினாலும், காட்டு மர இனங்களினாலும், அடுக்குத் தேனீ வகையின் மூலம் இங்கு தேன் உற்பத்தி செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் சுமார் 2000 தேனீவளர்ப்புத் தொழில் முனைவோரும், 10,000 தொழிலாளர்களும் இத்தொழிலில் ஈடுப்பட்டுள்ளனர்.

2013–2014–ஆம் ஆண்டில் தேன் கொள்முதல் ரூ.25.18 இலட்சம் மற்றும் விற்பனை ரூ.48.36 இலட்சம் எய்தப்பட்டுள்ளது.

தேனீ வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் பொருட்டு ரூ.2.38 இலட்சம் செலவில் மூன்று மாதத் திறன் மேம்பாட்டு பயிற்சியினை 25 நபர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம் அம்சி என்ற இடத்தில் வாரியம் அளித்துள்ளது.

## 3.6 மண்பாண்டத் தொழில்

கிராமப்புறங்களில் வாழும் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பாரம்பரிய கலையுடன் கையினால் மண்பாண்டங்களை உற்பத்தி செய்வது அவர்களுக்கு



வாழ்வாதாரம் அளிப்பதாகும். வாரியத்தின் கீழ் பதிவு பெற்ற 34 மண்பாண்ட தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களில் 3,816 உறுப்பினர்கள் உள்ளனர்.

இத்தொழிலானது பொருளாதார செயல்பாடுகளில் இன்றியமையாததாகும். மேலும் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இத்தொழிலை நம்பியுள்ளனர். மண்பாண்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும் அவர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளித்திடவும் வாரியமானது ரூ.3.73 இலட்சம் செலவில் 25 நபர்களுக்கு மண்பாண்ட தொழிலில் ஆறு மாத கால திறன் மேம்பாட்டு பயிற்சியினை அளித்து வருவதுடன், 150 கைவினைஞர்களுக்கு திறன் வளர்ச்சி மேம்பாட்டு கழகத்தின் நிதியுதவியுடன் ரூ.12.30 இலட்சம் செலவில் கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மூன்று மாத கால சுடுமண் சிற்ப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மண்பாண்டத் தொழிலாளர்கள் மழைக்காலங்களில் சந்திக்கும் இடர்களை கருத்தில் கொண்டு அவர்களின் பிரதான வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 2014–2015–ஆம் ஆண்டில் பராமரிப்பு உதவி தொகையாக தலா ரூ.4000/– வீதம் ரூ.4.50/– கோடி வழங்கிட அரசு ஒப்புதல் அளிக்க முடிவெடுத்துள்ளது.

## 3.7 கைவினைஞர்களுக்கான பயிற்சி

முதற்கட்ட பயிற்சி **395** நபர்களுக்கு மண்பாண்டம் / சுடுமண் சிற்பம், தேனீ வளர்ப்பு, தோல், தச்சு மற்றும் கருமார், அகர்பத்தி மற்றும் ஆயத்த ஆடைகள் ஆகிய தொழில்களில் ரூ.**42.94** இலட்சம் செலவில் அளிக்கப்பட்டதை தொடர்ந்து நூற்போர் பயிற்சியினை **200** நபர்களுக்கும், நெய்வோர் பயிற்சியினை **205** நபர்களுக்கும், நவீன ஆயத்த ஆடைகள் வடிவமைப்பு பயிற்சியினை **200** நபர்களுக்கும் ஆக **605** நபர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நிதி உதவியுடன் இரண்டாம் கட்ட திறன் மேம்பாட்டு பயிற்சியினை ரூ.**55.91** இலட்சம் செலவில் வாரியம் அளிக்கவுள்ளது.

## 4. இயற்கை சிகிச்சை மையம்

புதுமையான முயற்சியாக, வாரியத்தால், சென்னை பிரதான கதர் அங்காடியில் இயற்கை சிகிச்சை மையம் துவங்கப்பட்டு நீராவிக் குளியல், தண்டுவட குளியல், மண் குளியல் மற்றும் எண்ணை மசாஜ் போன்ற இயற்கை சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.



## 5. சந்தைப்படுத்துதல்

வாரிய அலகுகளில் உற்பத்திச் செய்யப்படும் பொருட்களைத் தவிர, சுயஉதவிக்குழுக்கள் மற்றும் கைவினைஞர்கள் உற்பத்திச் செய்யும் கைவினைப் பொருட்களும் மாநிலம் முழுவதும் உள்ள **106** கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கண்காட்சிகள் நடத்துவதன் மூலமும் கிராமப்புறங்களில் சிறப்பு பிரச்சாரம் செய்வதன் மூலமும் கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தி பொருட்களுக்கு முக்கியத்துவம் அளித்து பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது.

## 5.1 வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம்

“வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தினை” (MDA) 2010-2011ஆம் ஆண்டு முதல் கதராணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கதர் நிறுவனங்களுக்கு கதர் உற்பத்தி விலையில் **20** விழுக்காடு வணிக அபிவிருத்தி நிதியுதவியாக கதராணையம் அனுமதித்து வழங்கி வருகிறது. மாநில அரசும் கதராணையத்தைப் போன்று, 2012-2013ஆம் நிதியாண்டு முதல் ஆண்டு முழுவதும் கதர் உற்பத்தி மீது **20** விழுக்காடு நிதியுதவியாக அனுமதித்து வழங்கியுள்ளது. மேலும் 2013-2014ஆம் நிதியாண்டிலும் **20** விழுக்காடு நிதியுதவியை அரசு நீட்டித்துள்ளது.




காதி கிராப்ட் விற்பனை நிலையம், சிவகங்கை



இதனில் 5 விழுக்காடு தொகை கதர் தொழிலில் ஈடுபட்டுள்ள நூற்போர் / நெசவாளர்கள் மற்றும் பட்டுதொழிலில் ஈடுபட்டுள்ள இழைப்பவர் / சாயமிடுபவர் / நெசவாளர்களுக்கு ஊக்கத்தொகை / கருணைத்தொகையாக வழங்கிடவும், மீதமுள்ள 15 விழுக்காடு தொகையினை கதர் விற்பனையை அதிகரிக்க விற்பனைக் கழிவாக நுகர்வோர்களுக்கு வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, கதராணையம் வழங்கும் 15 விழுக்காடு நிதியுதவியுடன் சேர்த்து கதர் பருத்தி, பாலிவஸ்திரா மற்றும் பட்டு இரகங்களின் விற்பனை அடிப்படையில் மொத்தம் 30 விழுக்காடு விற்பனைக் கழிவாக நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## 6. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்கள் இணைக்கப்பட்டு **“பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்”** என்ற பெயரில் 2008–2009–ஆம் ஆண்டு முதல் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டு கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு, கதர் கிராமத்தொழில் வாரியம் மற்றும் மாவட்ட தொழில் மையம்

ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கிராமப்புறத்தில் தொழில் அமைக்க 25 விழுக்காடு முதல் 35 விழுக்காடு வரை விளிம்புத் தொகை மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் அமைக்கப்பட்ட தெரிவு குழு **(Task Force Committee)** பயனாளிகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்வு செய்யும்.

இத்திட்டத்தின் கீழ் 2008–2009–ஆம் ஆண்டு முதல் 2013–2014 வரை வழங்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விவரம் பின்வருமாறு :–

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | திட்ட எண்ணிக்கை | விளிம்புத் தொகை | வேலைவாய்ப்பு எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2008–09 | 100 | 175.08 | 964 |
| 2009–10 | 899 | 1204.36 | 8745 |
| 2010–11 | 603 | 1019.84 | 4143 |
| 2011–12 | 572 | 823.12 | 4939 |
| 2012–13 | 52 | 121.80 | 475 |
| 2013–14 | 602 | 1311.31 | 7212 |



## 7. உற்பத்தி மற்றும் விற்பனை

வாரியத்தின் 2013–2014–ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மற்றும் விற்பனை பின்வருமாறு :–

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | தொழில்களின் பெயர் | 2013–2014 ஆம் ஆண்டின் சாதனை | |
|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 1181.86 | 1850.85 |
| 2. | கிராமத் தொழில்கள் | | |
| அ | தோல் | 450.98 | 330.49 |
| ஆ | தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 603.79 | 656.85 |
| இ | சோப்பு | 817.60 | 730.33 |
| ஈ | கைமுறைக் காகிதம் | 75.57 | 73.89 |
| உ | தேனீ வளர்ப்பு | 25.18 | 48.36 |
| ஊ | இதர தொழில்கள் | 79.82 | 511.79 |
| | மொத்தம் | 2052.94 | 2351.71 |
| | ஒட்டு மொத்தம் | 3234.80 | 4202.56 |

2013–2014–ஆம் ஆண்டில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தினால் எய்தப்பட்ட **அதிக அளவு விற்பனையே** இதனின் சாதனையாக விளங்குகிறது.

## 8. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

வாரியப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு, ஊதியம் மற்றும் ஓய்வூதியத்திற்காகவும், கதர் உற்பத்திக்கான தள்ளுபடி மானியத்திற்காகவும் அரசு உதவியாக “நிகர ஈட்டு மானியம்” வழங்கப்படுகிறது. 2014–2015–ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பகுதி–2 திட்டத்துடன் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ.எண் | விபரம் | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நிகர ஈட்டு மானியம் | | 6465.88 |
| 2. | தள்ளுபடி | கதர் வாரியம் | 200.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 1000.00 |
| 3. | தணிக்கை கட்டணம் | | 323.89 |
| 4. | பகுதி – 2 திட்டங்கள் | | |
| | அ. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | | 39.71 |
| | ஆ. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 20.22 |
| 5. | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு மானியங்கள் | | 11.98 |
| 6. | மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்திற்கு மானியங்கள் | | |
| | அ. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | | 0.01 |
| | ஆ. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 7. | காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம் | | 0.01 |
| | மொத்தம் | | 8061.71 |



## 9. மறுபணியமர்வு

வாரியத்தில் உபரி பணியாளர்கள் என அரசால் கண்டறியப்பட்ட மொத்தம் 719 பணியாளர்களில் 480 பணியாளர்கள் பிற துறைகளில் மறு பணியமர்வு செய்யப்பட்டுள்ளார்கள். எஞ்சியுள்ள 239 பணியாளர்களில் ஓய்வு பெற்றவர்கள், இராஜினாமா செய்தவர்கள் மற்றும் காலமானவர்கள் போன்ற 82 நபர்கள் நீங்கலாக 157 பணியாளர்கள் வாரியத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

### 1. நோக்கங்கள்

தமிழ்நாடு பனை பொருட்கள் வளர்ச்சி வாரியம் கீழ்க்கண்ட செயல்பாடுகளை மேற்கொண்டுவருகிறது:–

- பனைப்பொருட்களை உற்பத்தி செய்திட தேவையான மூலப்பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கிட ஏற்பாடு செய்தல்,
- பனை பொருட்களை சந்தைப்படுத்தி பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

### 2. துவக்கம்

பனைத் தொழிலுக்கென தனியே, இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில்தான் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் **1994** ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம்–15இன் படி தோற்றுவிக்கப்பட்டு, **06.01.1995** முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

### 3. பணிகள்

பனை மரத்திலிருந்து உண்ணும் பொருட்களான பதநீர், பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனை சாக்லேட் போன்றவைகளும், உண்ணா பொருட்களான பனை ஓலையாலான கைவினைப் பொருட்கள், பனந்தும்பு,





**பனை மரம்**

தூரிகைகள், பனை நார் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை பனைத் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பனை உற்பத்திக்கு வழிவகுத்திடவும், பனை பொருட்களுக்கான அங்காடி வசதியை ஏற்படுத்திடவும், பனைத் தொழிலை வளர்த்திடவும் 731 ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள், 8 மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியன செயல்பட்டுவருகின்றன.

## 4. வரவு – செலவு திட்டம்

தனித்த வரவு–செலவு திட்டமின்றி, பனை வாரியத்திற்கான நிதி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வரவு – செலவு திட்டத்துடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

## 5. உற்பத்தி மற்றும் விற்பனை

2013–2014ம் ஆண்டில் ரூ. 11.85 கோடி மதிப்பிலான பனைப்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு ரூ. 13.05 கோடி பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.


















**பனை பொருட்கள்**

## 6. பதநீர்

பதநீர் பருவ காலமானது வழக்கமாக ஒவ்வொரு ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் துவங்கும். பதநீரை அதிக அளவில் விற்பனை செய்வதற்கென காஞ்சீபுரம் மாவட்டம் கடப்பாக்கத்தில் இரண்டு, சென்னை எழும்பூர், மதுரை மாவட்டம் தல்லாகுளம், சேலம் மாவட்டம் வனவாசி ஆகிய மூன்று இடங்களில் தலா ஒன்று வீதம் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஐந்து கூலர்களும், சேலம் மாவட்டம் தானாவதியூரில் 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கூலர் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளன. பதநீரை சுற்றுச்சூழலை பாதிக்காத கண்கவர் வண்ண டெட்ரா பேக்கில் நிரப்பப்பட்டு வாடிக்கையாளர்கள் விரும்பும் வண்ணம் விற்பனை செய்யப்படுகிறது.

## 7. பனை வெல்லம் கொள்முதல்

பனைத் தொழிலாளர்களிடமிருந்து பனை வெல்லம் கொள்முதல் செய்ய தேவைப்படும் நடைமுறை மூலதனத்தை அதிகரிப்பதற்கென அரசு ரூ. 50.00 இலட்சம் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு மாQயமாக அனுமதித்துள்ளது. இத்தொகை பனை வெல்ல



கொள்முதலுக்கென மாநில மற்றும் மாவட்ட சம்மேளனங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

2013–2014 ஆம் ஆண்டில், ரூ. 9.80 கோடி மதிப்புள்ள பனை வெல்லம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 8. உரிமம்

பனைத் தொழிலாளர்கள் பதநீரை இறக்கவும், விற்கவும், பனைவெல்லம் உற்பத்தி செய்யவும் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு உரிமம் புதுப்பிக்க 01.01.2013 முதல் மூன்றாண்டுகளுக்கு அரசு நீட்டிப்பு வழங்கியுள்ளது.

2013–2014 ஆம் ஆண்டில், 11,236 பனைத் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

**டி.பி.பூனாட்சி**
கதர் மற்றும் கிராமத் தொழில்கள்
அமைச்சர்